விலை: 60.00
பக்கங்கள் : 20

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

பருவ வெளியீட்டுப் பொதுசனநூலகம் யாழ்ப்பாணம்

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி சங்குநாதம்

சங்கு 25
ஒலி 082 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 27 ஞாயிற்றுக்கிழமை (10.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### வெடுக்குநாறிமலையில் கைதான
## ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் விளக்கமறியலில்

(வவுனியா)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேரை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள் ளது.

சிவராத்திரி தினத்தன்று வவுனியா வடக்கு வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் இடம் பெற்ற போது சப்பாத்துக் கால்களுடன் ஆலயத்திற்குள் நுழைந்த பொலிஸார் ஆலய பூசகர் 19

## வலிகாமத்தில் 67 ஏக்கர் காணி
### பொதுமக்களிடம் இன்று கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பகுதியில் இரா ணுவத்தினர் வசமுள்ள மேலும் 67 ஏக்கர் காணி இன்று உரிமையாளர் களிடம் கையளிக்கப்படவுள்ளது

சுமார் 33 வருட காலமாக இராணு வத்தின் உயர்பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட குறித்த காணி இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளது

இதற்கமைய காங்கேசன்துறை தெற்குப் பகுதியில் 235 கிராம சேவகர் பிரிவில் 20.3 ஏக்கர் காணிகளும் வறுத்தலைவிளானில் 241 கிராம சேவ கர் பிரிவில் 23 ஏக்கர் காணிகளும் மயிலிட்டி தெற்கில் 240 கிராமசேவகர் பிரிவில் 24 ஏக்கர் காணிகளும் விடு விக்கப்படவுள்ளன.

இதேவேளை விடுவிக்கப்படவுள்ள காணிகளின் உரிமையாளர் கள் இன்று யாழ்ப்பாணம் 19

### வெடுக்குநாறிமலையில் தமிழர்கள் மீது தாக்குதல்
# பொலிஸின் அடாவடியத்தை கண்டித்து நாளை கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

**வவுனியா வெடுக்குநாறிமலையில் தமிழர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து நாளை திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நல்லை ஆதீன முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக் கப்படவுள்ளது.**

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு சார்பாக குறித்த கவனயீர்ப்புப் போராட்டத் துக்கு அழைப்பு விடப்பட்டுள் ளது.

இது தொடர்பாக வெளி யிடப்பட்ட அறிக்கையில்,

வெடுக்குநாறி மலை இலிங்கேஸ்வரர் கோவில் மகா சிவராத்திரி பூசையின் போது பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்ட சம்பவங்கள் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தை யும் மிகுந்த மன வேதனைக்கு உள்ளாக்கி இருக்கின்றது.

சைவர்களின் வழிபாட்டு உரிமை மிக்க புனிதமான விரத நாளில் அப்பட்டமாக மறுக்கப்பட்டு மிக மோசமாக சைவ சமய விழுமியங்களை புனித சடங்குகளை அவமதிக் கும் சம்பவங்கள் அரங்கேறி யிருக்கின்றன.

அதன் உச்சகட்டமாக தவ றேதும் செய்யாத சிவனடியார் கள் எண்மர் விரதமிருந்து பூசையில் ஈடுபட்ட தருணம் மோசமாக 19

### யுக்திய சுற்றிவளைப்பு
#### 779 பேர் கைது

(கொழும்பு)

யுக்திய விசேட சுற்றி வளைப்பில் 779 பேர் பொலிஸ் விசேட அதிரடிப் படையின ரால் கைது செய்யப்பட்டுள்ள னர்.

கைது செய்யப்பட்டவர் களில் 620 சந்தேக நபர்கள் போதைப் 19

### வெளிநாட்டு கைக்குண்டு
#### முல்லையில் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாஞ் சோலை வைத்தியசாலைக்கு முன்பாக கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.


மாஞ்சோலை வைத்திய சாலைக்கு முன்பாக புதிதாக நிர்மாணிக் 19

### 'வடக்கின் பெரும் போர்'
## சென்.ஜோன்ஸ் வெற்றி




4ஆம் பக்கம் பார்க்க

## வரலாற்றுக் குற்றங்களில் இருந்து பாடம் படிக்காத கோட்டா ஒரு அறிவிலி
### மனோ எம்.பி காட்டம்



(கொழும்பு)

'சிங்கள பௌத்தர் பல மடைவது சிறுபான்மையின ருக்கு தீங்கு விளைவிக்கும் என்பதனாலேயே தனக்கு எதி ரான உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் ஒன்றுதிரண்டு அரகலவை நடத்தினார்கள்' என கோட்டாபய ராஜபக்ஷ தனது புத்தகத்தில் கூறி யிருப்பதானது, வரலாற்றுக் குற் றங்களில் இருந்து இன்னமும்கூட பாடம் 19

## வெடுக்குநாறிமலையில் பொலிஸாரின் செயற்பாடு அனைத்தும் அடாவடித்தனம்
### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



(யாழ்ப்பாணம்)

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோவிலில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர் கள் மீது பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்ட செயற்பாடு கள் அனைத்தும் அடாவடித் தனம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக் காட்டி யுள்ளார்.

நேற்றுக் காலை திறப்பு விழா நிகழ் 19

## பாலாவியில் மூழ்கி 9 வயது சிறுவன் பலி
### திருக்கேதீஸ்வரத்தில் சம்பவம்

(மன்னார்)

பாலாவி ஏரியில் மூழ்கிய 9 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

திருக்கேதீஸ்வரத்தில் நேற்று முன்தினம் இச்சம் பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் வவுனியாபூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 9 வயது கௌசிகன் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு உண்டு

**நெல்லியடி நகரத்தில் 33 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நெல்லியடி நகரத்தில் இருந்து 2Km தூரத்தில்
- விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இருந்து 500 m தூரத்தில்
- உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
- 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- பெற்றோல் செற் முன் வீதியில் 2Km தூரத்தில் நெல்லியடி பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2Km தூரம்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)

(0022)

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

**தொடர்பு : 071 173 3911, 076 853 5022**

# காணி விற்பனைக்கு உண்டு

**அச்சுவேலியில் 24 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- அச்சுவேலியில் இருந்து சன்னதி கோயில் பிரதான வீதி அருகாமை
- அச்சுவேலி பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து 1.5Km தூரத்தில்
- பிரதான வீதியில் இருந்து 200m தூரத்தில்
- தீத்தாம் பிள்ளையார் கோவில் இருந்து 100m தூரத்தில்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி
- நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)

(0022)

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

**தொடர்பு : 076 739 0413, 074 027 5135**

# மரண அறிவித்தல்

மலர்வு 29 - 04 - 1944



உதிர்வு 08 - 03 - 2024

## நாகரட்ணம் மகேசன் (செல்லத்தம்பி)

அராலி வடக்கு செட்டியார் மடத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு நாகலிங்கம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் மகேசன் அவர்கள் நேற்று முன்தினம் (08.03.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரட்ணம் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பாக்கியலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும் இலங்காதேவியின் ஆருயிர்க் கணவரும் காலஞ்சென்றவர்களான புனிதவதி, சுகிர்தலட்சுமி மற்றும் விக்கினேஸ்வரன், நித்தியலட்சுமி, சிற்சபேசன், சாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவராஜன் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், சிவானந்தமலர், இராமச்சந்திரன் மற்றும் ஜெகதீஸ்வரி, மனோ, மல்லிகாதேவி, வசந்தாதேவி, காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் இரங்கராஜன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஜெயரட்ணம் மற்றும் ஸ்ரீபாலன், கோணேஸ்வரி, ஜெயந்தி ஆகியோரின் அன்புச் சகலனும் முரளிதரன், பகீரதன் மோகனசுந்தரன், தயா, அருந்ததி, தமயந்தி, அருச்சுனன், இராதை, இராகவன், மகிழ்தினி, ஷாமினி, கிஷோத், கேதுஷா, சகானா, தர்ஷனா, றொஜேனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் யமுனா, ஐங்கரன், நிருத்தனா, ஜெயகாந்தன், ஜெயதர்ஷன், யாழினி, சுபாகர், சஜிதா, சுபாங்கி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ( 10.03.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கொக்குவில் மேற்கு, நாகலிங்கம் வீதி.

இலங்காதேவி (மனைவி) 077 103 9970

தகவல்: குடும்பத்தினர்

# வெடுக்குநாறிமலை சம்பவத்தை கண்டித்து மட்டக்களப்பில் இன்று போராட்டம்

(மட்டக்களப்பு)

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி நாளில் மதவழிப் பாட்டுரிமை மறுக்கப்பட்டமைக்கு எதிராக அகிம்சை வழிப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த போராட்டமானது, மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இன்று காலை 9.30 மணியவில் முன்னெடுக் கப்படவுள்ளது.

இந்நிலையில், போராட்டத்தில் கலந்துக் கொள்ளுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(ம-7,10)

# பணியாளர் தேவை

கொழும்பில் உள்ள உணவகம் ஒன்றிற்கு யாழ்ப்பாணப் பாரம்பரிய முறைப்படி சைவ அசைவ உணவு தயாரிக்கக்கூடிய 40 - 55 வயதுக்குட்பட்ட ஆண், பெண் சமையலாளர்கள் தேவை. (உணவு தங்குமிடம் இலவசம்)

**070 445 4656**

(006)

# மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-8502)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

# NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD, JAFFNA.

## A/L CHEMISTRY

P.LOGASANAN

REPEAT BATCH க்கு..... ஆரம்பமாகிறது.......

9 : 45 முதல் 11 : 45 வரை

CALCULATIONS (MCQ & Essay) & GENERAL CHEMISTRY (MCQ Revision)

MONDAY TO FRIDAY

2024 Batch இற்கு - CHEMICAL EQUILIBRIUM ஆரம்பமாகிறது & CALCULATIONS ( MCQ , Essay ) மீள செய்து விடப்படும்.

2025 Batch - CALCULATIONS & OXIDATION REDUCTION

2011 முதல் 2023 வரையான கடந்த கால வினாத்தாள்கள் அனைத்தும் முழுமையாக (MCQ , Structure , Essay) பரீட்சைக்கு முன்னதாக செய்து விடப்படும். அத்துடன் இறுதிப் பரீட்சை போலான 15 இற்கும் மேலான துரிதமான மாதிரிப் பரீட்சைகளும் வைத்து செய்து விடப்படும்.

For Admissions : 0765663006 , 0765693006 , 0777917611

வகுப்பின் ஆரம்பத்திலிருந்து எம்முடன் இணைந்து கொள்ளும் மாணவர்கள் சிறந்த பேறினை இறுதிப் பரீட்சையில் பெற முடியும்

THINK POSSIBLE (0019)

# பாலாவி...

ரித்திஸ் என்ற சிறுவன் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

திருக்கேதீஸ்வரம் கோவிலில் இடம் பெற்ற சிவராத்திரி திருவிழாவைக் காண மக்கள் குழுவுடன் நீராடச்சென்ற சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,10)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 076 097 3127

# மரண அறிவித்தல்

## தில்லைநாதன் மைதிலி (பேபி)



பிறப்பு: 19.03.1983
இறப்பு: 08.03.2024

ஏழாலை மத்தி ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதன் மைதிலி அவர்கள் நேற்று முன்தினம் (08.03.2024) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் தில்லைநாதன் (J.P ஓய்வுநிலை அதிபர்) காலஞ்சென்ற நவரத்தினமணி தம்பதியரின் அன்பு மகளும் தர்ஜினி (ஆசிரியர் - யா/ ஏழாலை தெற்கு அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை), தாரணி (சமுர்த்தி உத்தியோகத்தர் - உடுவில் பிரதேச செயலகம்), மயூரன் (இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர் - சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நவநீதராஜா (ஜெயா), சுபாஜினி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் யோகேஸ்வரி (பாடசாலை உத்தியோகத்தர் - யா/ அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலயம்), யசோதரன், மணிவண்ணன், பகீரதி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கிளிநொச்சி கல்வி வலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கரிஷ், திசாரா, தனுஶ்ரீ, தூபிகா, ஜன்சிகா, கார்த்திக் ஆகியோரின் பாசமிகு சிறியதாயும் சோனிஜா, திவ்யா ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (11.03.2024) திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஏழாலை மத்தி, ஏழாலை.


077 102 4342 (0020)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெடுக்குநாறிமலை சம்பவம்
# வன்முறை அரசியலின் உச்சம்

## தமிழர்களின் கையில் மீண்டும் ஆயுதம் திணிக்கும் முயற்சியா? - அருட்தந்தை சக்திவேல் கேள்வி



(திருமலை)

**வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோவிலில் நீதிமன்ற அனுமதியுடன் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிவபக்தர்களையும் அவர்களின் வழிபாட்டையும் அவமானப்படுத்தும் பொலிஸாரின் அராஜகத்தை கண்டிப்பதுடன் இது தமிழர்களின் கையில் மீண்டும் ஆயுதத்தை திணிக்க முற்படும் செயலா? என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.**

நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வெடுக்குநாறிமலை சிவராத்திரி சம்பவமானது நாட்டின் அடிப்படை மனித உரிமையையும் மற்றும் வழிபாட்டு உரிமையையும் மீறும் செயல் மட்டுமல்ல தமிழர்கள் மீதும் இந்துக்கள் மீதும் தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவாத, மதவாத வன்முறையின் தோற்றமுமாகும்.

இதில் பொலிஸார் அராஜகத்தோடு பேரினவாத அதிகார அரசியல் பக்க பலமும் அதற்கு உள்ளது என்பதை உணரக் கூடியதாக உள்ளது. இக்கொடிய மதவாத, இனவாத வன்முறை தடுத்து நிறுத்தப்படல் வேண்டும். இதனை சமயம் கடந்து அனைத்து சமய தலைவர்களும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் தமது எதிர்ப்பை கூட்டாக வெளிக்காட்ட வேண்டும்.

காவியை மையமாக்கொண்டு இயங்கும் பௌத்த தகவல் நிலையம் எனும் அமைப்பு வெடுக்குநாறி மலையில் இனவாதம், மதவாதம் என்பவற்றை தோன்றுவிக்கும் வழிபாடு நடைபெற உள்ளதாக பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் அனுப்பி உள்ளது. இக்கடிதம் எதனை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது? சிவராத்திரி வழிபாடு எவ்வாறு இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் எனக் கேட்கின்றோம்.

ஜெனிவா மனித உரிமை பேரவை கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் போதே தமிழர்களின் வழிபாட்டு உரிமை மீறப்பட்டுள்ளது. இலங்கை தொடர்பாக கடந்த காலங்களில் மனித உரிமை பேரவை பல அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் கடந்த காலங்களில் வழங்கிய போது அவற்றை பின்பற்றாமல் சர்வதேசத்தை ஏமாற்றும் ஆட்சியாளர் மனித உரிமை பேரவை கூட்டத்தொடர் நடக்கும் சந்தர்ப்பங்களில் அதனை அவமதிப்பது போல் நடப்பது இது முதல் தடவை அல்ல.

உயிர்ப்பு தினத்தில் கூண்டுகளை வடிக்க செய்து உயிர்களைக் கொண்டு அரசியல் செய்தவர்கள் தொடர்ந்து வன்முறை அரசியலை விரும்புகின்றனர் என்பதை வெடுக்குநாறி மலை சிவ வழிபாடு சம்பவம் உலகிற்கு வெளிப்படுத்தி உள்ளது. இது தமிழர்களின் கையில் மீண்டும் ஆயுதம் திணிக்க முற்படும் செயலா?

தேர்தல் காலத்தில் தமிழர்களின் வாக்குகளை எதிர்பார்த்து அரசியல் செய்யும் தென் பகுதி கட்சிகள் வெடுக்குநாறி மலையில் நடந்த அரச பயங்கரவாதத்திற்கு எதிராகவும் அதனைத் தூண்டிவிட்டு குளிர் காய்பவர்களுக்கு எதிராகவும் கருத்து தெரிவிக்க வேண்டும்.

சர்வதேச பெண்கள் தினத்தில் அவ்வழிபாட்டில் கலந்து கொண்ட பெண்களை அவமானப்படுத்தியதற்கு பெண்கள் தினத்தை கொண்டாடிய அனைத்து சக்திகளும் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்த வேண்டும்.

அத்தோடு மனித உரிமை அமைப்புகள் இதற்கு எதிராக தம் எதிர்ப்பை தெரிவிப்பதோடு ஜெனிவா மனித பேரவையில் தமிழர்களுக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு தனது ஆதரவையும் நல்க வேண்டும்.

தமிழர் தாயகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளும், சிவில் சமூக அமைப்புகளும், செயற்பாட்டாளர்களும் தமிழர் தாயகத்தை சூழ்ந்துள்ள இருளினை கருத்தில் கொண்டு விழிப்பு நிலையில் இருக்க வேண்டும். அத்தகைய விழிப்பினை கடந்த வாரம் சாந்தனின் வித்துடல் எடுத்து சென்ற போது காட்டியது போன்று ஒன்றுபட்ட சக்தியாக வெளிப்படுத்துவதற்கான காலம் உருவாகி வருகின்றது என்பதை உணர்ந்து தேசிய சிந்தனையோடு கூட்டாக செயற்படுவதையும் உறுதிசெய்தல்வேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-299)

# கணக்காய்வு சேவையில் 40 வீத வெற்றிடங்கள்

## போட்டிப் பரீட்சை விரைவில்

(கொழும்பு)

கணக்காய்வு சேவையில் 40 சதவீத வெற்றிடங்கள் காணப்படுவதாக கணக்காய்வாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதனால், சில விசேட கணக்காய்வு நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். இதன்படி, வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அரச சேவையில் தற்போதுள்ள பட்டதாரிகளிடம் இருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான போட்டிப் பரீட்சை விரைவில் நடத்தப்பட்டு 465 வெற்றிடங்களுக்கான புதிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# பண்டிகைக் காலத்தில் பொருட்களின் விலை அதிகரிக்கப்படாது

## நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் பொருளாதாரம் ஸ்திரத்தன்மை அடைந்துள்ளதால், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பொருட்களின் விலைகள் அதிகரிக்க வாய்ப்பில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இருப்பினும் சில வர்த்தகர்கள் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக மோசடி செய்து அதன் மூலம் பொருட்களின் விலை அதிகரிப்பை காட்டுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறானதொரு நிலையில், நேற்று முன்தினம் முதல் அமுலாகும் வகையில் லங்கா சதொச நிறுவனம் 400 கிராம் பால் மா பொதி ஒன்றின் விலை 125 ரூபாவினாலும், காய்ந்த மிளகாய் கிலோ கிராம் ஒன்றின் விலை 15 ரூபாவினாலும், வெள்ளை அரிசி கிலோ கிராம் ஒன்றின் விலை 5 ரூபாவினாலும் ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனியின் விலை 3 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சிவபூமி திருவாசக அரண்மனையில் சிறப்பாக இடம்பெற்ற சிவராத்திரி





(யாழ்ப்பாணம்)

யாழ். நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் மகாசிவராத்திரி தின நிகழ்வு நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது.

திருவாசக அரண்மனையில் வீற்றிருக்கும் "சிவ தட்சிணாமூர்த்தி" திருவாசக அரண்மனையில் அமைந்துள்ள 108 லிங்கங்களுக்கு அடியவர்கள் நீரூற்றி தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடக்கின் பெரும் போர்
# சென்.ஜோன்ஸ் அபார வெற்றி




(படங்கள் - சிவசாந்தன்)



சிறந்த துடுப்பாட்ட வீரர்
சகாதேவன் சயந்தன்



சிறந்த பந்துவீச்சாளர்
அருள்சீலன் கவிசன்



சகலதுறை வீரர்
நேசகுமார் எபநேசர் ஜெசியல்



சிறந்த விக்கெட் காப்பாளர்
சங்கீத் கிரேம் ஸ்மித்



சிறந்த களத்தடுப்பாளர்
ஜெயச்சந்திரன் அஷ்னாத்



ஆட்டநாயகன்
உதயனன் அபிஜோய்ஷாந்த்

சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரிக்கு இடையிலான 117ஆவது வடக்கின் சமரில் 10 விக்கெட்களால் சென். ஜோன்ஸ் இலகுவாக வெற்றி பெற்றது.

இதன் மூலம் வடக்கின் சமரில் 39ஆவது வெற்றியைப் பதிவு செய்த சென். ஜோன்ஸ் கல்லூரி, வடக்கின் சமர் தொடரில் 39 - 28 என்ற ஆட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறது.

79 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி 2ஆவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் விக்கெட் இழப்பின்றி 81 ஓட்டங்களைப் பெற்று அபார வெற்றியீட்டியது.

துடுப்பாட்டத்தில் அபிஜோய்ஷாந்த் 10 பவுண்டறிகள் உட்பட 50 ஓட்டங்களுடனும் அண்டசன் சச்சின் 3 பவுண்டறிகள் உட்பட 30 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர்.

முன்னதாக தனது இரண்டாவது இன்னிங்ஸை போட்டியின் மூன்றாம் நாளான நேற்றுக் காலை 9 விக்கெட் இழப்புக்கு 140 ஓட்டங்களிலிருந்து தொடர்ந்த யாழ். மத்திய கல்லூரி மொத்த எண்ணிக்கை 149 ஓட்டங்களாக இருந்தபோது கடைசி விக்கெட்டை இழக்க இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

விசேட விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டவர்கள் சிறந்த துடுப்பாட்ட வீரர்-சகாதேவன் சயந்தன் (யாழ். மத்திய கல்லூரி), சிறந்த பந்துவீச்சாளர்-அருள்சீலன் கவிஷன் (சென். ஜோன்ஸ்), சிறந்த சகலதுறை வீரர்- நேசகுமார் எபநேசர் ஜெசியால் (சென். ஜோன்ஸ்), சிறந்த விக்கெட் காப்பாளர்- சங்கீத் க்ரேம்ஸ்மித் (சென் ஜோன்ஸ்), சிறந்த களத்தடுப்பாளர்- ஜெயச்சந்திரன் அஷ்னாத் (சென். ஜோன்ஸ்), ஆட்டநாயகன்- உதயனன் அபிஜோய்ஷாந்த் (சென் ஜோன்ஸ்). (நி-33)

## விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணம்-2024

# இறுதிப்போட்டியில் மோதுகிறது

## கே.சி.சி.சி அணி-கிறாஸ்கொப்பர்ஸ் அணி





விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணத்தின் இறுதிப்போட்டி கிறாஸ் கொப்பர்ஸ் கே.சி.சி.சி அணிகள் தெரிவாகியுள்ளன.

எனவே நடந்த பிளே ஓப் போட்டியில் வெற்றி பெற்று கே.சி.சி.சி அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவான நிலையில் மற்றொரு பிளே ஓப் போட்டியில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி யாழ்.ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து விளையாடியபோது கிறாஸ்கொப்பர்ஸ் அணி யாழ்.ஜொனியன்ஸ் அணியை 45 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிக்குத் தெரிவானது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் அணி 30 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றுள் ளனர்.

கஜித்-32, கோகுலன்-31, அஜித்-29 ஓட்டங்களை பெற்றுள்ளனர். பந்து வீச்சில் யாழ். ஜொனியன்ஸ் அணியை சார்ந்த கிஸாந்துஜன் 27 ஓட்டங்களை கொடுத்து 4 இலக்குகளையும், விதுாஸன் 8 ஓட்டங்களை கொடுத்து 1 இலக்கினையும் கைப்பற்றியுள்ளனர்.

184 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 26.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

சௌமியன் -20, கிஸாந்துஜன்-19, சண்சஜன்-19 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். பந்து வீச்சில் கிறாஸ்கொப்பர்ஸ் அணியை சார்ந்த அஜித் 25 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளையும், ரசிகரன் 19 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், ஜனன்தன் 25 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் அஜித் 29 ஓட்டங்களையும், 03 இலக்குகளையும் பெற்று சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்ட இவர் இப்போட்டியுடன் தொடர்ந்து 3 போட்டிகளில் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டமை மேற்கூறப்பட்ட தொடரில் ஓர் சாதனையாக அமையலாம் என கருதப்படுகிறது.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் பலம் பொருந்திய அணிகளை கிறாஸ்கொப்பர்ஸ் அணியும் கே.சி.சி.சி அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போசனைக் குறைபாடுடைய மாணவர்கள் இலங்கையில் அதிகரிப்பு

## பிரித்தானிய ஆய்வில் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் 5 முதல் 19 வயது வரையிலான பாடசாலையில் கல்வி கற்கும் பெண் பிள்ளைகள் போசணைக் குறைபாடு காரணமாக எடை குறைவாக இருப்பதாக வைத்தியர்களின் மருத்துவ மற்றும் குடியுரிமைகள் நிபு ணத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வைத்தியர்களின் மருத்துவ மற்றும் குடியுரிமைகள் நிபுணத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளதாவது பிரித்தானிய 'லான்செட் மெடிக்கல் ஜர்னல்' இதழின் ஆய்வின் படி உலகில் போசணைக் குறைபாடு காரணமாக உடல் எடை குறைந்தவர்கள் அதிகம் இருக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளது.

199 நாடுகளில் 22 கோடி மக்களிடம் சுமார் 1,900 ஆராய்ச்சியாளர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் உடற் திணிவுச் சுட்டி (உயரத்திற்கான எடை) முக்கிய அளவுகோலாக எடுக்கப்பட்டுள்ளது. ஒருவரது உடலினது உயரத்திற்கு பொருத்தமான நிறை எவ்வளவு என்பதை கணித்தல் உடற் திணிவுச் சுட்டி ஆகும்.

1990-2022 வரை சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் போசணைக் குறைபாட்டால் பாடசாலை பிள்ளைகளின் உடல்ஆரோக்கியம் பாதிக்கப்படுவது மட்டுமன்றி மனவளர்ச்சி குன்றும் ஆபத்தில்உள்ளனர். எனவே இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நாட்டில் மன வளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் தலைமுறை உருவாகும்.

போசணைகுறைபாடுகாரணமாக பிள்ளைகளிடையே என்சைம்கள் மற்றும் ஹோர்மோன்களின் உற்பத்தி பல வீனமடைந்து நாளாந்த உடல் செயற்பாடுகளில் தொய்வு நிலை ஏற்பட வழிவகுக்கிறது. அத்தோடு சிறுவர்கள் நோயெதிர்ப்பு சக்தி குறைபாடு காரணமாக பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுவர்கள். போசணைக் குறைபாடு நெருக்கடி மனவளர்ச்சி குன்று வதற்கு முக்கிய காரணமாக உள்ளது. இது நாட்டில் தேசிய அபிவிருத்திக்கு பங்களிக்கக்கூடிய கல்விகற்ற மற்றும் புத்திசாலி இளைஞர் களின் எண்ணிக்கை குறை வதற்கு வழிவகுக்கும்.

தங்கள் வயதுக்குக் குறைவான எடையுடன் 450,000 ஆண்பிள்ளை களும் 410,000 பெண் பிள்ளைகளும் உள்ளனர்.

அதன்படி, நாட்டில் மொத்தமாக 860,000 பாடசாலை மாணவர்கள் எடை குறைவாக இருப்பதாக புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. (நி)

# 40 மில்லியன் முட்டைகள் இறக்குமதி

(கொழும்பு)



பண்டிகைக் காலத்தை முன்னிட்டு 40 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரிவலி சுந்தர இதனை தெரிவித்துள்ளார்.

இதனூடாக பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடின்றி நுகர்வோருக்கு முட்டை விற்பனை செய்யமுடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை நுகர்வோருக்கு 43 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை இராஜினாமா

(கொழும்பு)

நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை இராஜினாமா செய்துள்ளது.

சாந்த நிரியல்ல உட்பட 15 பேர் கொண்ட பணிப்பாளர் சபை இராஜினாமா செய்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். அமைச்சரின் அறிவித்தலுக்கு அமைய இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி நாளைதிங்கட்கிழமை புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவிற்கு தெரிவித்துள்ளார். (நி)


## பிற்போடப்பட்டுள்ளது

யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தின் 12.03.2024, செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி தற்போது நிலவும் கடும் வெப்பம் காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. (சி-8500)

அதிபர், யா/ஆவரங்கால்
மகாஜன வித்தியாலயம்,புத்தூர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 1967 . 03 . 10



மறைவு 2024 . 02 . 10

மல்லாகத்தை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர். கனகரத்தினம் ராசகுமாரன்

கடந்த 10.02.2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 10.03.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 11.03.2024 நாளை திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து 12.00 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் தொலைபேசி ஊடாகவும் சமூக வலைத்தளங்களினூடாகவும் அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும் வீட்டிற்கு வருகை தந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.) (1010)

54 மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.

தகவல்-
குடும்பத்தினர்.


# இராசிபலன்

10.03.2024
மாசி 27, ஞாயிற்றுக்கிழமை
அமாவாசை பிற்பகல் 3.42 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு 3.46 மணிவரை
சுபநேரம் 9.23-10.53மணிவரை
இராகுகாலம் 4.53-6.23மணிவரை

அமாவாசை விரதம்
சந்திராஷ்டமம்:பூசம்

வளவன்

**மேஷம்:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், போசன சுகமுண்டு, பொதுவாழ்வில் கௌரவம், அந்தஸ்து உயரும் நாள்.

**ரிஷபம்:** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, எடுத்தகாரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்,மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, பகை எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கோரிக்கைகள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள்.

**கடகம்:** மகிழ்ச்சி குறையா திருக்க மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், குடும்பத்தில் சிறுசிறு முரண்பாடுகள் தோன்றி மறையும்.

**சிம்மம்:** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

**கன்னி:** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும்நாள்.

**விருச்சிகம்:** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**மகரம்:** முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சொன்னசொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்,காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்:** ஆதாயம் தரும் வேலை யொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை கூடும், உடல்நலனில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

**மீனம்:** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் தேகநலன்கள் பாதிக்கப்படலாம்.

மிகவும் மகிழ்ச்சியானது சிறந்த நட்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கரணவாய்)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணி ளவில் பாடசாலை மைதானத் தில் இடம்பெறவுள்ளது.


பாடசாலை அதிபர் திருமதி. கிருஷ்ணலதா குலசங்கர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு பிரதம விருந் தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன் கலந்து சிறப் பிப்பார். (நி-60)



யாழ்ப்பாணம் கீரிமலை நகுலேஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தோற்சம் நேற்று சிறப்பாக நடைபெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)

# யாழில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்திற்கு 'சீல்'

## 73 ஆயிரம் ரூபா தண்டமும் அறவீடு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பகு தியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகம் ஒன்றுக்கு 73 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்துள்ள நீதிமன்று, குறித்த உணவகத்தையும் சீல் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பகுதியில் பொது சுகாதார பரிசோதகரான செ.பிரின்சன் தலைமை யில் உணவகங்களில் திடீரென மேற்கொள் ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, 180 கிலோ பழுதடைந்த ரொட்டிகள், 5 கிலோ இடியப்பம் மற்றும் 8 கிலோ பிட்டு என்பவற்றை பொலித்தீன் பைகளில் கட்டி குளிர்சாதன பெட்டிகளில் களஞ்சியப்ப டுத்தி வைத்திருந்தமை கண்டறியப்பட்டது.

குறித்த உணவகத்திற்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதி மன்றில் வழக்கு தொடரப்பட்ட நிலையில். உணவாக உரி மையாளருக்கு 73 ஆயிரம் ரூபாய் தண் டம் விதித்த மன்று, உணவகத்தை சீல் வைத்து மூடுமாறு உத்தரவிட்டது.(நி-33)

## துவிச்சக்கர வண்டிகள் மோதி விபத்து - ஒருவர் படுகாயம்

(கரணவாய்)

துவிச்சக்கர வண்டிகள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் பருத்தித்துறை ஓராங்கட்டைச் சந்தியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பொலிகண்டி மேற்கைச் சேர்ந்த நல்லதம்பி தங்கராசா (வயது- 48) என்பவரே படுகா யங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டுள்ளார். (நி-60)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3059

Search for people, places and things

### கோபி




### மதி





### சாலினி




### நிக்ஷன்




### டெஸ்மி




### சர்மி





நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 431
Viber 076 636 3378


# அடக்கு முறைக்குள் தமிழினம்



**வன்னிப் பெரும் நிலப்பரப்பில் நடந்த அநீதிக்கு நீதி வேண்டிய போரில் தமிழ் அரசியல் தலைவர்களின் நிலைப்பாடு மதில்மேல் பூனை போல இருந்ததன் வெளிப்பாடே இன்றைய தமிழினத்தின் அவல நிலைக்கு காரணம்.**

சிறுபான்மைத் தமிழ் மக்கள் மீது கடுமையைப் பிரயோகிக்கும் செயற்றிட்டத்தை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும் என்ற குரல்கள் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தாலும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அதற்கு எதிர்மறையானதாகவே இன்று வரை இருக்கின்றது.

தமிழ் மக்களும் இந்த நாட்டின் குடிமக்களே என்ற சிந்தனை எழாதவரை இந்த நாட்டின் அமைதி என்பது வெறும் பெயரளவிலேயே இருக்கும்.

இதைப்புரிந்து கொண்டால் மாத்திரமே சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கான தீர்வு சாத்தியப்படும்.

சிறுபான்மைத் தமிழினத்துக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் விட்டுக்கொடுப்பினூடாகவே கிடைக்க வேண்டும் என அரசாங்கம் கூறுமாயின் நிச்சயம் அதில் முரண் எழவே செய்யும்.

எங்கே சிக்கல்கள் எழுந்துள்ளது என்பதைப் புரிந்து கொண்டு அதைத் தீர்த்து வைப்பதே காலத்திற்கு சிறந்ததாகும்.

ஆயினும் இலங்கையில் அவ்வாறான செயற்பாடுகள் நடப்பதற்கான எந்தச் செயற்பாடுகளும் முளைவிடுவதாய்த் தெரியவில்லை.

பயங்கரவாதத்தை அழிப்பதாய் கூறப்பட்ட போர் பெரும் காலத்தை விழுங்கி விட்ட நிலையில் பயங்கரவாதம் அழிக்கப்பட்டதாய் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டு, இரண்டு தசாப்தங்கள் நெருங்கும் நிலையில் தமிழ் மக்களுக்கான உரிமை விடயத்தில் ஏதும் முன்னேற்றம் ஏற்பட்டதா எனின் நிச்சயம் பூச்சியம் எனும் நிலையினையே காட்டும்.

இதற்கு தமிழ் அரசியல் தலைவர்கள் மிகப் பெரும் காரணமாக உள்ளனர் என்ற உண்மையினையும் நாம் இங்கு கூறித்தான் ஆகவேண்டும்.

காலம் காலமாக சிங்கள பெரும்பான்மை அரச தலைவர்களை நம்பி ஏமாந்த தமிழ் தலைமைகள் திருந்தாததன் விளைவே போர் நிறைவு பெற்ற பின்னும் தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கவில்லை.

வன்னிப் பெரும் நிலப்பரப்பில் நடந்த அநீதிக்கு நீதி வேண்டிய போரில் தமிழ் அரசியல் தலைவர்களின் நிலைப்பாடு மதில்மேல் பூனை போல இருந்ததன் வெளிப்பாடே இன்றைய தமிழினத்தின் அவல நிலைக்கு முழுக்க காரணமாகும்.

போர் நிறைவு பெற்றதன் பின்னர் ராஜபக்ஷக்களின் வீழ்ச்சியை எவரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

ஆயினும் சிங்கள மக்களின் கதாநாயகர்களான ராஜபக்ஷக்களை அவர்களே தோற்கடித்து வீட்டிற்கு அனுப்பிய பின்னர் நல்லாட்சி மலர்ந்தது.

அந்த ஆட்சி பெயரளவில் நல்லாட்சியாய் இருந்ததே தவிர அதனால் தமிழ் மக்களுக்கு பயன் ஏதும் இல்லை என்பதே முடிவானது.

சர்வதேசத்தை ஆசுவாசப்படுத்தவல்ல [illegible]யாண்ட நல்லாட்சியை நம்பிய தமிழ் தலைமை சர்வதேச அரங்கில் வைத்து இலங்கை அரசின் பொறுப்புக் கூறலுக்கு கால அவகாசம் வழங்கத் தலைப்பட்டது.

இந்த அவகாசம் வழங்கலே தமிழ் தலைமை செய்த மிகப் பெரும் முட்டாள் தனமான செயல்.அதன்பின் நிலைமை தலைகீழாய் போய்விட்டது.

ஆட்சிமாற்றம், கட்சி மாற்றம், காட்சி மாற்றம் என இலங்கைத் திருநாட்டில் வரலாற்றில் இடம் பெறும் பல நிகழ்வுகள் அரங்கேறிவிட்டன.

இவை எவையும் தமிழ் மக்கள் மீதான அதிகாரப் பிரயோகத்தை சிறிதும் பாதிக்கவில்லை என்பது தான் மதி நுட்பமான விடயம்.

நேற்று முன்தினம் சிவராத்திரி பூசை ஏற்பாடுகளை மேற்கொள்ள சென்ற வெடுக்கு நாறி ஆதிசிவன் ஆலய பூசகர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

வவுனியா வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் தொல்பொருள் சின்னங்கள் பாதிக்காத வகையில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ளலாம் என நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில் பூசை ஏற்பாடுகளுக்குச் சென்ற பூசகர் உள்ளிட்ட இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமிழர்களின் மிகத் தொன்மை வாய்ந்த வழிபாட்டுச் சின்னமான வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தை அபகரிக்கும் செயற்றிட்டம் மிகத்தீவிரமாக நடந்து கொண்டிருக்கும் நிலையில் நீதிமன்ற அனுமதியைக் கூட கருத்தில் எடுக்காமல் பூசகரைக் கைது செய்ததற்குள் இருக்கும் அடக்கு முறையை தெளிவாய்ப் புரிந்து கொள்ள முடியும்.

நிலை இவ்வாறு இருக்கையில் யாழ்ப்பாணம் தையிட்டி விகாரை விவகாரமும் பெரும் பூதாகரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி தமிழ் மக்களுக்குரிய காணி என்றும் அதை அடாத்தாக ஆக்கிரமித்த படையினர் அதில் விகாரை அமைத்துள்ளதாகவும் பல்தரப்பட்ட போராட்டங்கள் நடந்து வரும் நிலையில், தையிட்டி விகாரைக்குரிய 8.04 ஏக்கர் காணியும் சிங்களவர்களின் காணி என படையினர் கூறியுள்ளனர்.

1960 ஆம் ஆண்டு முதல் வாழ்ந்த சிங்கள மக்களுக்குரிய காணியிலேயே விகாரை இருப்பதாக படையினர் தெரிவித்திருக்கின்றமை நிலைமையை மேலும் இறுக்கத்துக்கு தள்ளியுள்ளது.

மழை விட்டும் தூவானம் விடாத கதையாய் தொடர்ந்து தமிழ் மக்களின் பூர்வீகங்களை அழிப்பதிலும் அடாத்தாய் பிடிப்பதிலும் தீவிரம் காட்டும் பேரினவாத சக்திகளுக்குள் நசிங்கிப் போகும் தமிழினத்தை மீட்க வல்ல தலைவன் ஒருவன் உருவெடுக்காததன் விளைவே தமிழ் மக்களின் அவல நிலைக்கு காரணமாகிறது.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க, விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** தன்வந் என்ற 13 வயது மாணவன் பாக்குநீரிணையை நீந்திச் சாதனை படைத்துள்ளான். அவனுக்கு ஆலடி மாநாட்டில பாராட்டுத் தெரிவிக்க வேணும். இவ்வாறு விதானையார் கூற, அனைவரும் எழுந்து நின்று தன்வந்துக்குத் தமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து அமர்ந்தனர்.

**கங்காணி:-** அது சரி, சீ தமிழ் தொலைக்காட்சியில பாட்டுப் பாடி முதலிடத்தை தனதாக்கிக் கொண்ட கில்மிசாவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராட்டினவரல்லோ. அதுபோல, பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்த தன்வந்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராட்டாதது ஏன்?

**மூப்பர்:-** ஏன் கங்காணியார் எங்கட தமிழ் ஆரசியல்வாதிகளும் தன்வந்தைப் பாராட்டத் தவறி விட்டினம் தானே.


**சாத்திரியார்:-** எங்கட தமிழ் அரசியல்வாதிகள் தன்வந்தைப் பாராட்டியிருந்தால், ஜனாதிபதி ரணிலும் தனது பாராட்டைத் தெரிவித்திருப்பார்.

**மூப்பர்:-** உண்மையில எங்கட பிள்ளைகள் செய்கின்ற சாதனைகளை நாங்கள் பாராட்டி ஊக்குவித்தால் தான், எங்கட மண்ணிலும் சாதனைகள் பெருகும்.

**வாத்தியார்:-** பொதுவில எங்களிட்ட மற்றவர்களைப் பாராட்டுகிற பழக்கம் மிகவும் குறைவு தான்.

**சிறாப்பர்:-** ஏன் வாத்தியார் நீங்கள் இதைச் சொல்லுறியள், நாங்கள் ஒரு கூட்டத்தில இருந்தால், அந்தக் கூட்டத்தில ஒருவர் நல்ல கருத்தை முன்வைத்தால் அதனைக் கைதட்டிப் பாராட்டுகிற பழக்கம் கூட எங்களிட்ட இல்லைத் தானே.

ஒரு சிலர் கைதட்டினாலும் ஏனையவர்கள் நானேன் கை தட்டுவான் என்பது போல இருப்பினம்.



நான் ஒரு ராசி இல்லா ராசா...

**சாத்திரியார்:-** பொதுவில கை தட்டுவது, பாராட்டுத் தெரிவிப்பது, வாழ்த்துக் கூறுவது போன்ற நல்ல நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு நாங்கள் பழக வேணும். இந்தப் பழக்கத்தை எங்கட மாணவர்களிட்ட ஏற்படுத்துகிறது தான் ஒரே வழி. ஆகையால, பாடசாலைகள் இது விடயத்தில கருசனை கொள்ள வேணும்.

**மூப்பர்:-** இப்ப படிப்பித்தலைத் தவிர, இணைப்படவிதான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதில்லைத்தானே.

**சாத்திரியார்:-** ஓ! அதெண்டால் உண்மைதான். நாங்கள் எல்லா மாணவர்களையும் டாக்குத்தர் ஆக்கவும் என்ஜினியர் ஆக்கவும் தானே படிப்பிக்கிறம்.

**கங்காணி:-** இந்தக் கோதாரி நினைப்பில தான் அருமந்த மாணவச் செல்வங்கள் தங்கட திறமைகளை வளர்த்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காமல் நடுரோட்டில நிற்க வேண்டியிருக்குது.

**விதானையார்:-** அது சரி சாத்திரியார், குழந்தைகள் பிறந்த உடனேயே இந்தக் குழந்தை டாக்ரராகும். அல்லது எஞ்ஜினியர் ஆகும் எண்டுதானே சாத்திரிமாரும் ஜாதகத்தில எழுதுகினம்.

**சாத்திரியார்:** வேற, இந்தப் பிள்ளை மிகச் சிறந்த சோதிடராக வரும் என்று எழுதினால், எத்தனை பெற்றார் அதனை ஏற்றுக் கொள்ளுவினம்.

அதால சாத்திரத்தைச் சாதகமாகச் சொல்ல வேணும் என்றொரு விதி இருக்குதல்லோ. அந்த அடிப்படையிலதான் பிறக்கிற அத்தனை குழந்தைகளையும் நாங்கள் டாக்குத்தராகவும் எஞ்ஜினியராகவும் வரும் என எழுதுகிறம்.

உண்மையில அந்தக் குழந்தைகளில தான் சிறந்த பாடகர், சிறந்த விளையாட்டு வீரர், சிறந்த அரசியல்வாதி, சிறந்த மதத் தலைவர், சிறந்த வர்த்தகர், சிறந்த பேச்சாளர் என அத்தனை பேரும் இருக்கினம். ... நாங்கள் இதைச் சொல்லப்போனால் அது பெற்றாருக்குப் பிடிக்காது.

இந்தாப் பாருங்க, சீ தமிழ் தொலைக்காட்சியில **ஸரிகமப** நிகழ்ச்சியில கலந்து கொண்டு முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட கில்மிசா என்ற மாணவி தான் வழங்கிய ஒரு செவ்வியில; தன்ர இலட்சியம் ஒரு மருத்துவராக வருவதுதான் என்று சொல்லியிருக்கிறார்.

இங்க தான் அடிப்படையில பாடத்தெரிவு இடறுப்படுகுது. உண்மையில நான் சிறந்த இசை மேதையாக வரவேணும். தமிழகத்து இசை மேதைகள் சுசிலா, ஜானகி போன்று நானும் இசை உலகில் சாதனை படைக்க வேணும் எண்டு தான் அந்தப் பிள்ளை சொல்லியிருக்க வேணும்.

ஆனால் அந்தப் பிள்ளையையும் எங்கட தமிழற்ற டாக்குத்தர் நோய் பிடிச்சிற்றுது. அப்ப இனி என்ன செய்யிறது?

**பண்டிதர்:-** சரி... சரி... இப்ப நாங்கள் கதைக்கிறதையும் மிகக் கவனமாகக் கதைக்க வேணும். ஆரு எங்க நிண்டு வீடியோ எடுக்கினம் எண்டு தெரியாது.

**சிறாப்பர்:-** அதெண்டால் உண்மைதான். அண்மையில வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில ஒரு பெண் உத்தியோகத்தர் தனது சக உத்தியோத்தரோட கதைத்ததை ஆரோ போனில வீடியோ செய்து சமூக வலைத் தளங்களில வெளிப் படுத்தியிருந்தினம். கடைசியாக அந்தப் பெண் உத்தியோகத்தருக்கு இடமாற்றம் கிடைச்சது தான் மிச்சம்.

**கங்காணி:-** அட சங்கதி அப்படியோ. அப்ப அந்த உத்தியோகத்தருக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டு விட்டுது போல.

**வாத்தியார்:-** பகலில பார்த்துக் கதை. இரவில் அதுவும் கதையாத எண்டு தமிழில ஒரு பழமொழி இருக்குதல்லோ, ஆனால் இப்ப எங்கட மண்ணில ஒரு அநியாயம் நடக்குது.

**சிறாப்பர்:-** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:-** புலம்பெயர் நாடுகளில உள்ள எங்கட பிள்ளைகள் யாழ்ப்பாணத்திற்கு வந்து ஓ.எல் படிச்சவியள். ஏ.எல் படிச்சவியள். கம்பஸில ஒரே பச் என்ற அடிப்படையில ஒன்றுகூடல் நடத்துகினமல்லோ. இப்படி ஒன்றுகூடல் நடத்தும்போது **நான் ஒரு ராசியில்லா ராசா...** என்று பாடத் தொடங்கி தன்ர பழைய காதல் கதைகளைக் கூறி, அப்ப நான் அந்தப் பிள்ளையைத் தான் காதலித்தனான் எண்டு பெயரையும் சொல்லிவிட, அது முகநூலில வந்து குடும்பங்களைக் குலைக்குதாம்.


**சாத்திரியார்:-** அட, நாசமறுப்பு. இப்ப அந்தப் பிள்ளை திருமணமாகி குடும்பத்தோட இருக்க, இவன் பாவி வெளிநாட்டில இருந்து இஞ்ச வந்து ஒன்றுகூடல் நடத்தி, உள்ளதை உளறி விட ஒற்றுமையாக இருந்த குடும்பமல்லலோ குலையுது.

**பண்டிதர்:-** அப்ப ஒன்றுகூடலும் தன்ர வேலையைக் காட்டுது எண்டு சொல்லுறியள்.


இப்படி பண்டிதர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சீனாவுடன் கை கோர்த்தது பாகிஸ்தான். இந்தியாவின் நிலை இனி எப்படி இருக்கும் வியாசரே?

**மதுசன் மீசாலை**

காக்கைக் கூட்டத்தைப் பார்த்தாவது தமிழ் தலைவர்கள் திருந்தமாட்டார்களா வியாசரே?

காக்கைக் கூட்டத்திற்குள் எம் தலைவர்களை ஒரு அரை நாள் விட்டாலே போதும் அந்த இனம் அடிபட்டு அழிந்து போய்விடும்.

காக்கைகள் ஒரே மாதிரி இருப்பதன் சிந்தனையே யார், யாருக்கும் தலைவர் இல்லை என்பதன் வெளிப்பாடே.

இவர்கள் உள்ளே புகுந்தால் நான் இறகில் வெள்ளை கொண்ட காக்கை, நான் தலையில் சாம்பல் நிறத்தையுடைய காக்கை, நான் ஆல மரத்தில் இருக்கும் காக்கை, நீ பனை மரத்தில் இருக்கும் காக்கை என பேதம் பிரித்து தலைமைப் பதவிக்கு ஆசை கொண்டு சூழ்ச்சி செய்து அந்த இனத்தை காலி செய்துவிடுவார்கள்.

ஆதலால் அப்படியொரு விசப் பரீட்சை பற்றி சிந்தித்துக் கூடப் பார்க்காதீர்கள். பிளீஸ்.

**மயூரன் வடமராட்சி**

சீனாவுடன் கை கோர்த்தது பாகிஸ்தான். இந்தியாவின் நிலை இனி எப்படி இருக்கும் வியாசரே?

எதிரிக்கு எதிரி நண்பன் என்ற கோட்பாட்டை சீனாவும் பாகிஸ்தானும் பின்பற்றுகிறது போலும்.

தெற்காசியாவில் இந்தியா- சீனாவின் வளர்ச்சி மிக வேகமாக உருவெடுத்துக் கொண்டிருக்கிறது.

இதில்-இந்தியாவின் கை ஓங்கவே செய்கிறது.

இதைப் பொறுக்காத சீனா இந்தியாவின் எதிரியை தனது நண்பனாக்கி இந்தியாவை அச்சுறுத்தியிருக்கிறது.

இந்த பூச்சாண்டிக்கெல்லாம் இந்தியா பயப்படப் போவதில்லை என்பதை சீனாவும் பாகிஸ்தானும் புரிந்து கொண்டால் சரி.

**கனேஸ் பருத்தித்துறை**

பாக்கு நீரிணையைக் கடந்த சாதனை வீரன் தன்வந் பற்றி?

தன்வந்தின் சாதனை பிள்ளைகளுக்கான உத்வேகமாக இருக்கிறது. தவிர பெற்றோருக்கு நல்ல பாடத்தையும் கற்றுத் தருகிறது.

பிள்ளைகளை அவர்கள் விரும்பிய துறையில் ஈடுபட செய்ய வேண்டியவர்கள் பெற்றோர்கள்.

ஆனால் இன்றைய பெற்றோர் அப்படியில்லை. தன் மகன் மருத்துவராக வேண்டும். எஞ்ஜினியர் ஆக வேண்டும் என்று அவர்களை பிளிந்து எடுக்கிறார்கள். ஒரு தாய், தந்தை கூட உனக்கு என்ன விருப்பம் என்று பிள்ளைகளைப் பார்த்துக் கேட்டதில்லை.

தன்வந்தின் சாதனை சாதாரண சாதனை அல்ல. அவனின் சாதனையின் பெரும் பங்கு அவன் பெற்றோரைச் சார்ந்ததே.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**இந்துஜா கந்தர்மடம்**

புற்றுநோயாளர்கள் வடமாகாணத்தில் அதிகரித்துவிட்டனரே?

இப்போது எம்மிடம் ஆரோக்கியமான உணவு என எதுவுமே இல்லை என்றாகிவிட்டது.

எங்கும் நஞ்சு எதிலும் நஞ்சு மரபணு மாற்றப்பட்ட மரக்கறிகள், அதிக விளைச்சலுக்காய் தெளிக்கப்படும் இரசாயன மருந்துகள், பூச்சிகளைக் கட்டுப்படுத்த தெளிக்கப்படும் மருந்துகள் என அத்தனையும் மனித அனுகுலத்தைப் பாதிக்கும் இரசாயனங்களே.

இவற்றைத் தெரியாமல் பயன்படுத்துவதில் தவறேதும் இல்லை.ஆனால் இதனால் ஆரோக்கியம் குன்றும் எனத் தெரிந்தும் உயிர்கொல்லி மருந்தை உணவில் கலக்கும் முட்டாள் மனிதனை என்னவென்று கூறி விட

மருந்தடித்த பழத்தை பறவைகள் உண்ணாது,

அணில் அண்டியும் பார்க்காது,

விலங்குகள் கிட்டவும் வராது. ஆனால் அதை மனிதனால் மட்டும் எப்படி உண்ண முடிகிறது?

புற்றுநோயாளர்கள் வடமாகாணத்தில் அதிகரித்துவிட்டனரே?

**பார்த்தீபன் பருத்தித்துறை**

மூன்று ஆண்டுகளாய் ரஷ்யா-உக்ரைன் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் மூன்று நாட்களில் உக்ரைன் தலைநகரைக் கைப்பற்றி விடுவோம் என்கிறாரே புடின்?

தலைக்கனம் என்பது மனிதனை அழிக்கும் ஆயுதம்.ஏனோ இதுபலருக்கும் புரிவதில்லை.

கொஞ்சம் வல்லமை இருந்தால் மமதை தலைக்கேறிவிடும். அந்த ஆணவத்தில் எல்லை மீறி நடந்து கொள்வார்கள்.

தவமிருந்து சிவனிடம் வரம் வாங்கிய சூரனுக்கு ஏற்பட்ட ஆணவமே அவன் அழிவை நிச்சயித்துவிடுகிறது.

இதுபோலத்தான் ரஷ்யாவின் தலைவரும் ஆணவம் கொண்டு ஆடுகிறார் போலும். ஆட்டடும் ஆடி அடங்கும் வாழ்க்கை என்பதை புரிந்து கொள்ள அவருக்கு நேரம் வந்தே தீரும்.

**திருஷ் தென்மராட்சி**

மாணவர்களை இலக்கு வைக்கும் போதைக்கும்பலை என்ன செய்யலாம் வியாசரே?

தன் இனத்தையே கருவறுத்து பணம் தேடும் இவர்களை வீதியோரக் கம்பத்தில் கட்டி வைத்து...... எல்லாம் சரி வந்திருக்கும். என்ன செய்வது எம்.ஜி.ஆர் இல்லையென்றால் நம்பியார்கள் தானே கதா நாயகர்கள்.

எம்.ஜி.ஆர் மறுபிறவி எடுக்காமல் போய்விடுவாரா என்ன. நிச்சயம் மீண்டும் வருவார். வந்து இந்த போதைக் கும்பலை கூட்டதோடு...... தாய்த் தமிழை அழிவிலிருந்து காப்பார்.

அதுவரை நம்பியார்களின் ஆட்டத்தை கண்டும் காணாததுமாய் விட்டுவிடுவோமே.

**தருண் திருநெல்வேலி**

திருடர்கள் திருந்த வாய்ப்பிருக்கிறதா வியாசரே?

சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது என்பார்கள். ஆனால் திருட்டு விடயத்தில் திருடர்கள் அவ்வாறு இல்லை. ஒருமுறை திருடி விட்டால் திருட்டு அவர்களுக்கு பிடித்துப் போய்விடும். அதை விட்டுவிட மாட்டார்கள்.

நம் நட்டை எடுத்துப் பாருங்கள்.எமது நாட்டை சூறையாடிய திருடர்கள் இன்னும் எமது வளங்களைத் திருட எவ்வளவு முயற்சி செய்கிறார்கள்.

இதைத்தான் திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடினார் போலும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

**படம்: தங்கப்பதக்கம்**
**இயற்றியவர்: கண்ணதாசன்**
**இசை: எம்.எஸ். விஸ்வநாதன்**
**பாடியவர்: பி. சுசீலா, சௌந்தர்ராஜன்**



நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
அன்பு மணி வழங்கும் சுரங்கம் வாழ்க வாழ்க

எங்கள் வீடு கோகுலம்
என் மகன் தான் கண்ணனாம்
தந்தை வாழுதேவனோ
தங்கமானா மன்னனாம்
(எங்கள் வீடு..)
நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்

அன்னை என்னும் கடல் தந்தது
தந்தை என்னும் நிழல் தந்த்து
(அன்னை..)
பிள்ளை செல்வம் என்னும் வண்ணம் கண்ணன் பிறந்தான்
நன்றி என்னும் குணம் கொண்டது
நன்மை செய்யும் மனம் கொண்டது
எங்கள் இல்லம் பேரை கண்ணன் வளர்ப்பான்

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்

வெள்ளம் போல ஓடுவான்
வெண்மணல் மேல் ஆடுவான்
கானம் கோடி பாடுவான்
கண்ணன் என்னைத் தேடுவான்
(கானம் கோடி..)

மாயம் செய்யும் மகன் வந்தது
ஆயர்பாடி பயம் கொண்டது
அந்த பிள்ளை செய்யும் லீலை நானறிவேன்
இந்த பிள்ளை நலம் கொள்ளவும்
என்னைப் பார்த்து எனை வெல்லவும்
கண்ணில் வைத்து நெஞ்சில் வைத்து
நான் வளர்த்தேன்

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்

கோலம் கொண்ட பாலனே
கோவில் கொண்ட தெய்வமாம்
தாயில் பிள்ளை பாசமே
தட்டில் வைத்த தீபமாம்

பாசம் என்று எதை சொல்வது
பக்தி என்று எதை சொல்வது
அன்னை தந்தை காட்டும் நல்ல சொந்தம் அல்லவா?
பிள்ளை என்னும் துணை வந்தது
உள்ளம் என்றும் இடம் கொண்டது
இல்லம் கண்டு தெய்வம் தந்த செல்வம் அல்லவா?

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்

# சேமிப்பும் முதலீடும்... மாத்தியோசியுங்கள் பெண்களே!

***மற்ற தளங்களில் வேகமான வளர்ச்சியைப் பதிவு செய்யும் பெண்கள், பொருளாதாரத் தளத்தில் இன்னும் அதிகம் முன்னேறவில்லை என்பது வருத்தத்துக்குரிய உண்மை. முந்தைய தலைமுறைப் பெண்களின் கதை வேறு.***

வருடமும் மார்ச் 8 பெண்கள் தினமாகவும், நவம்பர் 19 ஆண்கள் தினமாகவும் கொண்டாடப்படுகின்றன. இவற்றில் பெண்கள் தினத்துக்குத் தரப்படும் முக்கியத்துவம் ஆண்கள் தினத்துக்குத் தரப்படுவதில்லை. ஏனெனில், வருடத்தின் ஒவ்வொரு தினமுமே ஆண்கள் தினமாகத்தான் இருந்தது. ஆனால், இன்று நிலைமை வெகுவாக மாறியிருக்கிறது.

## சுதந்திரக் காற்று...

ஆணுக்கு நிகரான மரியாதை தரப்பட்டு, சுதந்திரக் காற்றைப் பெண்ணினம் சுவாசித்தது எல்லாம் ஆதியில் சில காலமே. அதன்பின் உலகின் எல்லா பாகங்களிலும் அடக்கி, ஒடுக்கப்பட்ட பெண்ணினம், மறுபடியும் தலைதூக்க ஆரம்பித்தது 18 ஆம் நூற்றாண்டில் தான். முக்கியமாக, 19 ஆம் நூற்றாண்டு பெண்கள் நூற்றாண்டாகப் பார்க்கப்படுகிறது. காரணம், உலகெங்கும் நிகழ்ந்த பெண் விடுதலைப் போராட்டங்கள், பெண்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு, சட்ட உதவி, பொருளாதாரம், அரசியல் போன்ற எல்லா தளங்களிலும் சம உரிமையை வேண்டின. ஓரளவு வெற்றியும் பெற்றன.

## நேற்றும் இன்றும்...

மற்ற தளங்களில் வேகமான வளர்ச்சியைப் பதிவு செய்யும் பெண்கள், பொருளாதாரத் தளத்தில் இன்னும் அதிகம் முன்னேறவில்லை என்பது வருத்தத்துக்குரிய உண்மை. முந்தைய தலைமுறைப் பெண்களின் கதை வேறு. அவர்களின் வட்டம் வீடு, குழந்தைகள், சமையல் என்றே அமைந்திருந்தது. கணவர் திடீரென இறக்க நேர்ந்தால் அவர் செய்திருந்த முதலீடுகள், இன்ஷூரன்ஸ், வாங்கியிருந்த கடன் போன்ற விடயங்கள் பற்றிய எந்தத் தெளிவும் மனைவிக்கு இருக்கவில்லை. கணவர் மறைவு என்கிற பேரிடியுடன், தங்கள் பொருளாதாரம் தடம் புரள்வதைத் தவிர்க்க முடியாத நிலையும் கைகோக்க, பிறவிப் பெருங்கடலில் கரை சேர முடியாமல் தத்தளித்தனர் பெண்கள்.

ஆனால், இன்றைய தலைமுறைப் பெண்களின் நிலை சற்று வேறு. கல்வி, வேலை, கைநிறையச் சம்பளம் என்று ஆணுக்கு நிகராக அனைத்தும் அவர்கள் வசம்.

எனினும், இன்றையப் பெண்கள் சற்று பின்தங்கி, தயங்கி நிற்பது பொருளாதார தளத்தில் தான். காரணம், பணம் என்கிற உலகம் ஆணுக்கானது என்ற எண்ணம் அவர்களுக்குள் ஆழமாகப் பதிந்திருப்பதே. "சேமிப்பு, முதலீடு எல்லாம் அவர் டிபார்ட்மென்ட்" என்று சொல்லி ஒதுங்கிக்கொள்ளும் பெண்களின் எண்ணிக்கை இன்னும் குறையவில்லை. இவர்கள் தங்களைச் சுற்றி நடக்கும் சமகால நிகழ்வுகளை சற்றுக் கவனிப்பது நல்லது.

## தலையாய பிரச்சினை...

நம் சமூகத்தில் இன்று பெண்களுக்கான தலையாயப் பிரச்சினை, விவாகரத்து. ஆயிரம் காலத்துப் பயிர் என வர்ணிக்கப்பட்ட திருமணம், இன்று பல காரணங்களால் நட்ட சில நாள்களிலேயே வாடிவிடுவதைப் பார்க்கிறோம்.

"இவையெல்லாம் பணக்காரர்களுக்கான பிரச்சினை. நம் வீடுகளில் நடைபெற வாய்ப்பே இல்லை" என்ற நம் பெண்களின் அசைக்க முடியாத நம்பிக்கையைக் கீழ்க்காணும் நிதர்சனங்கள் சற்று அசைத்துப் பார்க்கின்றன.

## உதவிக்கரம் நீட்டும் ஆண் இனம்...

தன் வீட்டுப் பெண்கள் பொருளாதார அறிவைப் பெற வேண்டும். முதலீடுகளில் உற்சாகத்துடன் ஈடுபட வேண்டும் என்றே பெரும்பாலான ஆண்கள் விரும்புகிறார்கள்.

இப்படி அனைத்துத் தரப்பில் இருந்தும் ஊக்கமும் உற்சாகமும் தரப்படும் நிலையில், பெண்கள் சேமிப்பு, முதலீடு போன்ற விடயங்களில் தங்களுக்கிருக்கும் தயக்கத்தையும், தாழ்வு மனப்பான்மையையும் உதறிவிட்டு பொருளாதார அறிவை வளர்த்துக்கொள்வது முக்கியம். சேமிப்பு, முதலீடு தொடர்பான விடயங்களைக் கற்றுக்கொள்ளும் முடிவை பெண்கள் உடனடியாகத் தொடங்குவது அவசியத்திலும் அவசியம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



03 செங்கை ஆழியான்

அவை முஸ்லீம் வர்த்தகர்களின் வர்த்தகசாலைகள். ஆம், யாழ்ப்பாணக் கோட்டை கம்பீரமாக எழுந்து நின்ற இடத்தில் முதலில் முஸ்லீம் வர்த்தகர்களின் இரு வர்த்தகசாலைகள் இருந்தன. நாவாந்துறையிலிருந்து அரியாலை வரையிலான கடற்கரையோரமும், உள்வாங்கி நாவலர் வீதி வரையிலான பரப்பும் அக்காலகட்டத்தில் காட்டு மரங்கள் நிறைந்த பிரதேசமாக விளங்கின.

மனித சஞ்சாரமற்ற இப்பரப்பில் சிறு காட்டு விலங்குகள் சுதந்திரமாகச் சஞ்சரித்தன. மான்கள், முயல்கள், நரிகள் வெகு இயல்பாக அலைந்து திரிந்தன. பலவிதமான கடற் பறவைகள் சுதந்திரக் காற்றில் மிதந்து கண்ணா மரங்களில் தங்கி இனம்பெருக்கின. எனினும் கொழும்புத்துறை, அலுப்பாந்திப் பகுதிகள் போக்குவரத்துக்குரிய துறைகளாக விளங்கியதால் குடியிருப்புக்களைக் கொண்டிருந்தன. அவற்றைவிட பண்ணையில், காட்டுப் பரப்பில், கரையோரமாக முஸ்லீம் வர்த்தகர்களின் இரு சிறு பண்டசாலைகள் அமைந்திருந்தன.

அவற்றை அமைக்க யாழ்ப்பாண மன்னன் அவர்களுக்கு அனுமதி வழங்கியிருந்தான். "பகலில் நகரத்தில் வியாபாரம் செய்துவிட்டு இரவு வேளைகளில் கரையோரப் பண்டகசாலைகளுக்குத் திரும்பி விடவேண்டும்" என்ற மன்னனின் கட்டளையை அராபிய முஸ்லீம்கள் ஒழுங்காகப் பேணினர். இத்தகைய முஸ்லீம் வர்த்தகசாலைகள் யாழ்ப்பாணப் பண்ணையில் மாத்திரமன்றி நீர் கொழும்பு, கொழும்பு, காலி முதலான கரையோரப்பகுதிகளிலும் காணப்பட்டன.

போர்த்துக்கேயப்படை கரையிறங்கியது. யாழ்ப்பாண மன்னன் புவிராச பண்டாரம் பரராசசேகரன் தனது வீரர்களுடன் போர்த்துக்கேய ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்தான். பெரும் யுத்தம் மூண்டது சுதந்திரத்தைப் பேண ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து அணிதிரண்ட தமிழர் படை களப்பலியாகியது.

யாழ்ப்பாண அரசனைக் கைப்பற்றிய போர்த்துக்கேயத் தளபதி பூர்த்தாடு அவனது சிரசைக் கொய்து, ஈட்டியிற் குத்தி நிறுத்தி வைத்ததன் மூலம் தனது ஆதிக்க வெறியைத் தீர்த்துக் கொண்டான். கைப்பற்றிய பூமியைத் தொடர்ந்து போர்த்துக்கேயரின் கீழ் வைத்திருப்பதிலுள்ள இடர்ப்பாட்டைப் பூர்த்தாடு நன்குணர்ந்தான். அதனால் ஊர்ப் பிரமுகர்களைக் கூட்டி, எதிர் மன்ன சிங்ககுமாரன் என்ற அரசகுலத்தாளை யாழ்ப்பாணத்தில் மன்னனாக நியமித்து, போர்த்துக்கேயரின் மேலாதிக்கத்தை ஏற்று அரசாளும்படி பணித்து பெரும் திரவியத் திறைகளுடன் மரக்கலமேறினான்.

அவ்வாறு திரும்பும்போது தமக்கு எதிராகச் செயற்படுவார்களெனப் கருதிய எண்ணூறு வடக்கரையும் சில சோனகரையும் சிரச்சேதம் செய்துள்ளான். அத்துடன் பண்ணைக் கரையில் இருந்த முஸ்லீம்களின் வர்த்தக சாலைகளை அழித்து, அவற்றிலிருந்த 10 ஆயிரம் கண்டி நெல்லையும், 400 கண்டி அரிசியையும் கொள்ளையடித்துக் சென்றான். (சுண்டி என்பது ஓர் அளவு 500 இறாத்தல்களைக் கொண்டது.

1621 பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி யாழ்ப்பாண மன்னனுடன் ஏற்பட்ட மனக்கசப்பால் போர்த்துக்கேயர் மீண்டும் 1620 ஆம் ஆண்டு படையெடுத்து யாழ்ப் பாணவரசைக் கைப்பற்றிக் கொண்டனர். யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசிச் சுதந்திர மன்னன் சங்கிலி (குமாரன்) செகராசசேகரன், யாழ்ப்பாணம் தன் சுதந்திரத்தை இழந்த இறுதிப் போரில் சிறைப்பட்டு, மரணமடைய நேரிட்டது. போர் த்துக்கேயரின் இப்படையெடுப்பிற்குக் "கப்பித்தான் மேஜர்" பிலிப் தே ஒலி வேறா என்பான் தலைமை வகித்தான் 1621 ஆம் ஆண்டு பிலிப் தே ஒலிவேறா நல்லூரைத் தன்னுறைவிடமாக்கிக் கொண்டான்.

நல்லூரில் பெரிய கோயிலாக நல்லூர்க் கந்தசுவாமி கோயில் விளங்கியது. இன்று முத்திரைச்சந்தியில் கிறிஸ்தவ தேவாலயம் இருக்குமிடத்தில் இக்கோவில் வானளாவிய ராஜ கோபுரங்களுடனும் கோட்டை போன்ற மதிற் சுவர்களுடனும், தென்னிந்தியக் கோயில்களின் பாரிய வடிவில் அமைந்திருந்தது. பிலிப் தே ஒலிவேறா அப்பெரிய கோயிலை இடித்துத் தரைமட்டமாக்குமாறு கட்டளையிட்டான். நல்லூர்க்கந்தகவாமி கோயிலை அடி அத்திவாரத்தோடு கிளறிக் குவிக்குமாறு கட்டளையிட்டான். முருகைக் கற்களினாலும், சுண்ணாம்புக் கற்களினாலும் சுதை கொண்டு கட்டப்பட்டிருந்த அக் கோயிலின் கற்கள் மலைபோலக் குவிந்தன.

"இப்பெரிய கோயிலில் கிறிஸ்தவரல்லாதவர்கள் மிக்க ஈடுபாடுடையவர்களாக இருந்தனர். அவன் அதனை அழிக்காது விட்டால், அவன் விரும்பிய எல்லாவற்றையும் வழங்குவதாக யாழ்ப்பாணப் பிரமுகர்கள் அவனுக்கு வாக்குறுதி அளித்தனர். ஆனால், அவன் ஒரு மதப்பற்று மிக்க கத்தோலிக்கனாதலால், அவர்களின் நடவடிக்கை அக் கோயிலை அழிப்பதற்குக் கொண்டிருந்த விருப்பத்தினை மேலும் அதிகரிக்க வைத்தது. எனவே அதனை அத்திவாரமில்லாது அழிக்குமாறு கட்டளையிட்டான்" என குவேறோஸ் பாதிரியார் தனது நூலில் கூறுகிறார். ஒலிவேறா, யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளிலிருந்த சைவாலயங்கள், வைணவ ஆலயங்கள் அனைத்தையும் உடைத்துத் தள்ளுமாறு பணித்தான். கீரி மலைத்திருத்தம் பலேஸ்வரன் கோயில், பொன்னாலை வரதராசப்பெருமாள் கோயில் போன்ற பெரிய ஆலயங்களும் தரைமட்டமாக்கப்பட்டன. போர்த்துக்கேயப் பறங்கிகளின் கண்களிற் பட்ட சைவக் கோயில்கள் அனைத்தும் கற்குவியல்களாக்கப்பட்டன.

நல்லூரிலிருந்து போர்த்துக்கேய ஆட்சியை பிலிப் தே ஒலிவேறா நடத்திய போதிலும், தமிழர்களுடன் நடந்த போர் முடியவில்லை. சுதந்திர வேட்கை கொண்டு கிளர்ந்தெழுந்த தமிழ் வீரர்கள், தங்களது தாயக மண்ணிலிருந்து அந்நியரைத் துரத்திவிடும் எண்ணம் கொண்டவர்களாக இடைக்கிடையே படைதிரட்டிப் பறங்கிகளைத் தாக்கி வந்தனர். வருணகுலத்தான் என்பான் தஞ்சாவூர்ப் படையொன்றுடன் ஒலிவேறாவை எதிர்த்துத் தோல்வி கண்டான். பின்னர் சின்ன மீகாப்பிள்ளை என்பான், தமிழ்ப்படையொன்றுடன் தொண்டைமானாற்றில் இறங்கி நல்லூரை முற்றிகையிட்டு தோல்வி காண நேர்ந்தது. தஞ்சாவூர் நாயக்கன் அனுப்பிய மற்றொரு படையும் தோல்வியுற்றுத் திரும்ப நேர்ந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரிஷிசுனக் சிறந்த குக் பகிரும் அக்ஷதா மூர்த்தி!

இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக்கின் சமையல் திறமையை அவரின் மனைவி அக்ஷதா மூர்த்தி பாராட்டியுள்ள சம்பவம் பலரின் கவனத்தைப் பெற்றுள்ளது. ரிஷி சுனக் மற்றும் அக்ஷதா மூர்த்தி இங்கிலாந்தின் 10 டவுனிங் தெருவில் தங்கள் மகள்கள் கிருஷ்ணா, அனுஷ்கா மற்றும் செல்ல நாய் நோவாவுடன் வசித்து வருகின்றனர். சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி இவர்கள் இருவரும் இணைந்து அளித்துள்ள பேட்டியில் பல சுவாரஸ்ய தகவல்களைப் பகிர்ந்துள்ளனர்.

**கிரேட் செஃப்**

தன் கணவரின் சமையல் திறமை குறித்து கூறிய அக்ஷதா மூர்த்தி, ரிஷி சிறந்த குக், ரிஷிக்கு நிச்சயமாக அந்தத் துறையில் அதிக திறமை இருக்கிறது. நாட்டை நடத்தும் பிஸியான வேலையோடு, சமையலறையில் செலவிட அவருக்கு அதிக நேரம் கிடைப்பதில்லை என்றார். அதனை ஆமோதிக்கும் வகையில், முக்கியமாக சனிக்கிழமை காலை உணவு மட்டும், அதிலும் பிரிட் டிஷ் சமையல்காரர் கோர்டன் ராம்சே செய்யும் முட்டைத் துருவலைச் செய்கிறேன் என்று சுனக் கூறினார்.

**ஆர்கனைஸ்டு பர்சன்**

இவர்கள் இருவரும் ஸ்டான்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் சந்தித்து காதலித்து திருமணம் செய்து கொண்டனர். அந்தச் சமயத்தில் தனது சுகாதாரமற்ற பழக்க வழக்கங்கள் சுனக்கை துன்புறுத்தியதாக அக்ஷதா கூறினார்.

அவர் தொடர்கையில், நாங்கள் ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது, என் படுக்கையிலேயே சாப்பிடுவேன். ரிஷி நான் வசிக்கும் இடத்திற்கு வருவார். சில சமயங்களில் என் படுக்கையில் தட்டுகள் இருக்கும் என் கணவரை ஒப்பிடும்போது நான் மிகவும் ஆர்கனைஸ்டு பர்சன் அல்ல என்றார். இருவரில் ரிஷி சுனக் மிகவும் நேர்த்தியானவர் என்று இருவருமே ஒப்புக் கொண்டனர்.

**க்யூட் பேரன்ட்ஸ்**

இருவருக்குமே தற்போது 43 வயதாகிறது. இரண்டு பிள்ளைகளுக்குப் பெற்றோராக இருப்பவர்கள், தங்களின் பிள்ளைகளின் வேலைகளையும் சமமாகப் பிரித்துக் கொள்கிறார்கள். அக்ஷதா குழந்தைகளின் வீட்டுப்பாடத் தில் கவனம் செலுத்த, சுனக் மீதமுள்ளவற்றை கவனித்துக் கொள்கிறார்.

பள்ளி தொடர்பான விடயங்களில் நான் மிகவும் கண்டிப்பானவள், அவர்கள் வீட்டுப் பாடங்களைச் செய்கிறார்களா, படிக்கிறார்களா என்பதை உறுதிப் படுத்துவேன். பள்ளி தொடர்பான எதையும் சிறப்பாகச் செய்வதை உறுதி செய்வேன் என்றார்.

**பர்சனல் டைம்**

இவர்கள் இருவரும் சேர்ந்து ஃபிரெண்ட்ஸ் எபி சோட்களை ஒன்றாகப் பார்ப்பதாகக் கூறியுள்ளனர்.

# கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த 'அஷ்கபத்' நகரம்!

மத்திய ஆசியாவில் அமைந்துள்ள துர்க் மெனிஸ்தான் மர்மம் மற்றும் முரண்பாடு களால் மூடப்பட்ட ஒரு நிலம். இது பரந்த பாலைவனங்கள், பண்டைய நகரங்கள் மற்றும் ஈர்க்கக்கூடிய நினைவுச்சின்னங்கள் ஆகியவற்றை பெருமைப்படுத்துகிறது.

சோவியத் யூனியனின் சரிவுக்குப் பிறகு, 1991 இல் இந்த நாடு நிறுவப்பட்டது. அதன் பின்னர் துர்க்மெனிஸ்தான் சர்வா திகாரத் தலைவர்களால் ஆளப்பட்டது. முதலில் சபர்முரத் நியாசோவ் மற்றும் பின்னர் குர்பாங் குலி பெர்டிமுகமெடோவ் ஆகியோரால் ஆட்சி செய்யப்பட்டது. தற்போதைய ஜனாதிபதி செர்தார் பெர்டி முஹமடோவ் ஆவா.

துர்க்மெனிஸ்தானின் தலைநகரான அஷ் கபத் 2013 ஆம் ஆண்டு கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தது. 4.5 மில்லியன் சதுர மீற்ற பரப்பளவில், 543 வெள்ளை பளிங்கு கட்ட டங்களின் ஈர்க்கக்கூடிய சேகரிப்புக்காக நகரம் இந்த புகழைப் பெற்றது. இந்த கட் டடங்களில் பெரும்பாலான மக்கள் வசிக் காமல் இருந்த போதிலும் பலரும் ஈர்க் கக்கூடிய பதிவுகளின் பட்டியலில் சேர்கிறது.

இந்நாட்டின் சில பகுதிகளில் இயற்கை வளங் கள் நிறைந்தவையாக இருந்தாலும், நாட்டின் பெரும் பகுதி காரகும் பாலை வனத்தினால் நிறைந்துள்ளது.

துர்க்மெனிஸ்தான் உலகில் மிகக் குறைவாக பயணம் செய்யும் நாடுகளில் ஒன்றாகும். அங்கு செல்பவர்கள், நாட்டில் நடைமுறையில் இருக் கும் சில அசாதாரண விதிகளால் திகைத்துப் போவார்கள்.


இதுவே துர்க்மெனிஸ்தானை பார்வையிடு வதற்கு மிகவும் தனித்துவமான நாடாக மாற் றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## எழுந்து நின்று வெல்



புதிய வாழ்வு வாழ உனக்கு
எண்ணமில்லையா?-உயர்
வான வாழ்வு வாழ என்றும்
துணிவு இல்லையா?-மனிதம்
அஞ்சிடாது வாழும் வாழ்வு
அஞ்சுவதில்லை- அன்பு
தோல்வி தன்னைக் கண்டு வாழ
எண்ணுவ தில்லை.

வாழும்போது தாழ்வு வந்து
சேர்வ தில்லையே- உலகில்
நாளும் காணும் காட்சி-வாழ்வின்
துயரைத் தீர்க்குமா?-புவியில்
புதுமை கண்ட நாளில் மனிதன்
எழுச்சி கொள்வதே-என்றும்
மனித வாழ்வு கண்ட காட்சி
புரட்சி வென்றதே.

கனவு கண்டு வாழ்ந்த வாழ்வு
கவலை தீர்த்ததா?-உன்
இழிவு கூறும் செய்திபுவியில்
இழிவைத் தீர்த்ததா?-மதங்கள்
கூறும் செய்தி உனக்கு
மகிமை தந்ததா?-மனிதம்
எழுச்சி கொண்டு எழுவதாக
எழுந்து நின்று வெல்.

வளவை வளவன்.

## விடியல் உன்னைத் தேடும்

ஆதிச் சிவனாரய் அம்மனுக்கு பாங்களித்து
பாதிச்சிவனாகி பாகம் பிரித்த பின்னும்
நீதி வரவில்லை எம் மண்ணில்.
பாரதி பாடியென்ன வீதியில் தனியே செல்ல
முடிந்ததா பெண்ணினம் பள்ளி சென்ற
கிருஷாந்தி முதல் வித்தியா வரை
நடந்ததுதான் என்ன?

சாதனைப் பெண்கள் கின்னசில் இடம் பிடித்தாலும்
சாமானியப் பெண்கள் தன்மானத்திற்காய்
தவிக்கும்நிலை உண்டு
எம் மண்ணில். விழித்திடு பெண்ணே விழித்திடு
விடியல் வெகு தூரமில்லை பழித்திடும் இச் சமூகத்
திரையை கிழித்திட்டு புறப்படு
விடியல் உனைத் தேடும்.

ஆழியூரான்

## விகட பகை

கூண்டடைத்த குயிலைப் பிடித்து பாடல் கேட்குமே
நாவறண்ட தாகம் தீர்க நாதியில்லையே
யார் எரிந்து எவர் அழிந்து போனால் என்னவோ
நாயகனாய் நீ அதனை விற்றால்ப் போதுமே
ஆதியிலே அள்ளியது போதவில்லையே
அநீதியிலே அங்குலமாய் ஈழம் போகுதே
காதினிலே இரவிரவாய் கதைகள் நடக்குதே
கட்டாந்தரை கடல் வளங்கள் இரையுமாகுதே
மாடுவேய்ந்த தரைகளெல்லாம்
மடுவமாகுதே காடு தழை மலைகளெல்லாம்
விகாரையாகுதே கப்பல் வந்து காத்திருந்து
ஆய்வு செய்யுதே பல அப்பன் ஆச்சி அடிவயிறு
புளியைக்கரைக்குதே ஒப்புதலில் கப்பமாகித்தேசம்
போகுதே அரியனைக்கு யாரு சொந்தம்
தெரிய வில்லையேஅகில பகையில் ஈழ மாலை
சூடி விட்டதே!

யாழ் வாகீஷ்

## மௌனத்தின் தேடல்-706.



### பாசத் தந்தை

மலர்ந்தும் மலராத பாதி
மலர் போல மலரும்
விழி வண்ணமே எனத் தாலாட்டி உறங்க
வைத்ததை பாசத் தந்தை
அன்புள்ள அம்மாவாய்
அப்பாவாய்,தெய்வமாய் நீ இருக்கையில்
குறையேதும் எனக்கிலையே
என தந்தையின்
தலைமேற் தலை சாய்த்து கண்ணுறங்கும்
பாசமகள் இவள்.

சி.மகாலட்சுமி -கொக்குவில்

### என் உயிர் தேவதை

தேனினும் இனிய மொழி பேசுகிறாய்
உள்ளத்தை கொள்ளை கொள்கிறாய்
புன்னகையால் என்னை சிறைப்பிடித்தாய்
முத்தம் நித்தம் தந்திடுவாய்
பால் ஆறும் தேன் ஆறும்
உன்னைக்கண்டால்
-சொக்கி நிற்கும்
ஆசைத் தந்தை என்பதனால்
பாச மழை பொழிகிறாய்
கடவுள் தந்த என் உயிர் தேவதை
-இவள் தானோ

இளம்பவாழியான்-உடுப்பிட்டி

### போதுமா அன்பு முத்தம்

தாயின் சுமையோ பத்து மாதம்
தந்தையின் சுமையோ பல காலம்
மகளை அணைத்தும் அன்புடன்
பேசியும்
கண்டித்தும் கனிவு காட்டியும்
கல்லூரியில் கற்க வைத்தும்
அவையகத்தில் முதன்மை ஆக்கியும்
வைத்த என் ஆசை அப்பாவுக்கு
போதுமா இந்த அன்பு முத்தம்

பிரம்மா.யதுர்சன்-கொக்குவில் இந்துக் கல்லூரி

### மனம் திருந்துவாரா

எதைக் கேட்டாலும்
சீறிச் சினக்கும் அப்பா
அன்பு,பாசம் என்மீது காட்டுவதில்லை
இதுவரை சாப்பிட்டாயா என்று
கேட்டதும் இல்லை
அப்பாவின் பாசத்துக்காக ஏங்கும் நான்
இந்தப் படத்தை வெட்டி
அப்பாவின் மேசையில்
ஒட்டி விட்டால் அவர் மனம் திருந்துவாரா!

பி.மதுஷ்சன்-தையிட்டி

### என்னை மறந்து

மழைநீரை கண்டவுடன்
மகிழ்தசையும் மரங்கள் போல
உன் அரவணைப்பால்
என்னையே மறக்கும்
சிறு குழந்தை நான்
கொஞ்சி பேசும்-உன்
மழலை மொழி என்னை
கெஞ்சி கெஞ்சி கேட்கச்
சொல்கிறது.

ஆ.லக்ஷ்மி -வவுனியா

### அன்புக் கரங்கள்

கருவறையில் இருந்து வந்த எம்மை
காலமெல்லாம் தன் தோளில் சுமந்திடும் அப்பா
தன்னலமில்லாத சேவகனாய்
தன்னிகரில்லாத் தலைவனாய்
தன் மானத்துடன் தரணியில் நாம் நிமிர்ந்து நிற்க
வியர்வை சிந்தி உழைத்திடும் உத்தமர்
வீண் பழி எம் மீது வராது காலமெல்லாம் காத்து
அன்பு மழை பொழிந்து
அன்புக் கரங்களால் கட்டியணைத்து
'முத்தங்கள் பல தந்து வாழ்வில் எம்மை
முன்னேற வழிகாட்டிய தெய்வம்
தாய்க்குபின் பெண் பிள்ளையிடம்
தாயன்பைப் பெற துடிக்கும் அப்பா

ஆ.செல்வி-திருநாவலூர்

### "தந்தையின் அணைப்பு தரணியில் பெரிது"



தந்தையின் அணைப்பு தரணியில் பெரிது
அணைத்துத்தூங்கும் தந்தையே
உங்கள் செல்வப் புதல்வி கண்மூடித்தூங்கும் போது
புன்னகை
பூத்துக் கொள்கிறாள்
மகளாகப் பிறந்து விட்டாள்
வரும் காலத்தில் றேறொருவன்
கைகளிலே மாறும் போதும்
கண்கலங்காதே தந்தையே
விழியோரம் கண்ணீர்கண்டு தயங்காதே தந்தையே.

அபிகுலமாலிகா சித்தன்கேணி

## மௌனத்தின் தேடல்- 707



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

390

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# இரத்தச் சோகை நிலையை தவிர்பது எப்படி?

(சென்றவாரத் தொடர்ச்சி....)

**இரத்தச்சோகையைக் குறித்து உங்கள் பிள்ளையின் மருத்துவர் என்ன செய்யலாம்?**

உங்கள் பிள்ளையின் இரத்தத்தில் உள்ள ஈமோகுளோபின் அளவை தெரிவிக்கும் ஓர் எளிமையான இரத்த பரிசோதனையை உங்கள் மருத்துவர் செய்வார். இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை, அளவு மற்றும் வடிவம் என்பன இரத்த சோகையின் வகையை காண்பிக்கும். ஒருசில இரத்தத் துளிகளினால் ஈமோகுளோபினின் அளவை விரைவாக அளந்து விடலாம்.

உங்கள் பிள்ளையின் மருத்துவர் ஒரு உடற் பரிசோதனையையும் செய்வார். உங்கள் பிள்ளையின் சக்தியின் அளவுகள், பொதுவான உடல் நலம், உணவுகள் மற்றும் குடும்ப வரலாறு என்பவற்றைப் பற்றியும் கேட்பார்.

**இரத்தச் சோகைக்கான சிகிச்சைகள்**

சிகிச்சை உங்கள் பிள்ளையின் இரத்தச்சோகை எவ் வளவு கடுமையானது மற்றும் அத ற்குக் காரணம் என்ன என் பவற்றைச் சார்ந்திருக்கிறது.

பொதுவான சிகிச்சைகள் பின்வருவனவற்றை உட்படுத்தும்.

• இரும்புச்சத்து கொடுக்கக் கூடிய மருந்துகள்.

• குழந்தைகளின் இரும்புச் சத்து நிறைந்த போர்மூலா.

• பாலைக் குறைத்து இரும்புச்சத்தைக் கூட்டுதல் போன்ற உணவு முறையில் மாற்றங்கள். இறைச்சி மற்றும் பச்சைக் காய்கறிகள், கீரைவகைகள் போன்றவை இரும்புச்சத்து நிறைந்த உணவுகளுக்குள் உட்படுகின்றன. இறைச்சி சாப்பிடாத பிள்ளைகள் பச்சைக் காய் கறிகள், கீரை வகைகளை அதிக மாக உண்ண வேண்டும்.

போலிக் அசிட் மற்றும் விற்றமின்B12 மருந்துகள். குடற்புழுத் தொற்று ஏற்படுமாயின் அதற் கான சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் பாதணிகள் அணிவது, உணவு சமைக்க, அருந்த முன்னரும் மலசலம் கழித்த பின்னரும் கைகளை நன்றாகச் சவர்க்காரம் கொண்டு கழுவுதல் வேண்டும். கடுமையான நோயொன்றினால் உண்டாகும் இரத்தச் சோகைகளுக்கு விசேடமான சிகிச்சை முறைகள் வைத்தியசாலையில் வழங்கப்படும்.

**மருத்துவ உதவியை எப்போது நாடவேண்டும்?**

பின்வரும் நிலைமைகளில் உங்கள் பிள்ளையின் வழக்கமான மருத்துவரை அழைக்கவும் உங்கள் பிள்ளை வெளிறிக் களைப் படைந்து மற்றும் விரை வாகச் சுவாசிக்கின்றான் என் றால் உங்கள் பிள்ளைக்கு இரத்தச்சோகை இருக்கலாம் என நீங்கள் சந்தேகிக்கி றீர்கள்.



**முக்கிய குறிப்புகள்**

.மிகவும் பொதுவாக இரத்த த்தில் போதியளவு இரும்புச்சத்து இல்லாதிருப்பதால் இரத்தச் சோகை ஏற்படுகிறது.

• உங்கள் பிள்ளை அடிக்கடி களைப்படைந்து பலவீனமாக மற்றும் வெளிறி இருந்தால் இரத்தச் சோகைக்கான உங்கள் மருத்துவரைச் சந்திக்கவும்.

• உங்கள் குழந்தைகளுக்கு 6 மாதம் முடிவடைந்த பின்னர் இரும்புச்சத்து நிறைந்ததிட உணவுகள் வழங்க வேண்டும்.

• இறைச்சி மற்றும் பச்சைக் காய்கறிகள் உட்பட இரும்புச் சத்து நிறைந்த உணவுகளைப் பிள்ளைக்குக் கொடுக்கவும்.

• தனிநபர் சுகாதார முறைகளைச் சரிவரப் பின்பற்றவும்.

**இரும்புச்சத்தின் அவசியம்**

இரும்பு என்றால் வலிமை. பூமியில் அபரிமிதமாகக் கிடைக் கும் தாதுப்பொருட்களில் முக்கிய மானது. பல்வேறு சாதனங்கள் செய்யப்பயன்படும். இரும்பில்லாமல் இயந்திரங்கள் இல்லை. உடலுக்குத் தேவையான தாதுப் பொருட்களில் இரும்பும் ஒன்று. நமது இரத்தத்தில் ஈமோகுளோபின் என்ற பொருள் இரும்பாலானது. இரும்புச்சத்து இல்லாவிட்டால் கலங்களால் ஒட்சிசனைப் பெற்றுக்கொள்ள முடியாது. இரும்புச் சத்தின் தினசரித் தேவை 1-3 mg. ஆனால் உடலால் இரும்புச் சத்தை அகத்துறிஞ்சும் திறன் ஓரளவுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. தானியங்கள் மிகுந்த உணவுகளில் இருந்து 2-5 வீதமான இரும்புச்சத்தைத்தான் உடல் அகத்துறிஞ்ச இயலும். குறைந்த அளவு தானியங்கள், அதிகளவு இறைச்சி மற்றும் மீன் செறிந்த உண வுகளிலிருந்து உடல் 10-20 வீத மான இரும்புச்சத்தை அகத்துறிஞ்சிக் கொள்ளும். இதனால் உணவில் தினசரி தேவையை விட 10-25 மட ங்கு அதிகமாயிருக்க வேண்டும்.

இரும்புச்சத்துள்ள உணவுகள் இரும்புச்சத்து நிறைந்த உணவுகளை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. மாமிச உணவுகளிலிருந்து கிடைக்கும் இரும்புச்சத்து.

2. அசைவ உணவுகளிலிருந்து கிடைக்கும் இரும்புச்சத்து.

அசைவ உணவு இரும்புச்சத்து சராசரி உணவில் 85 வீதம் கிடைக்கின்றது. ஆனால் இந்த 85 வீதத்தில் 20வீதம்தான் உடலால் அகத்துறிஞ்ச முடியும். இந்த அகத்துறி ஞ்சலை அதிகரிக்க உணவுடன் விற்ற மின் C மற்றும் அசைவ உணவுப்புரதம் சேர்த்துக் கொள்ள வேண்டும் அசைவ உணவு இரும்புச்சத்து, சைவ உணவு இரும்புச்சத்தை விட நன்றாக உடலால் அகத்துறி ஞ்சப்ப டுகிறது.

**இரும்புச்சத்து நிறைந்த அசைவ உணவுகள்**

முட்டை , இறைச்சி, ஈரல்.

இரும்புச் சத்து நிறைந்த சைவ உணவுகள்

வெந்தயக்கீரை, முல்லை, முசுட்டை பொன்னாங்காணி வல்லாரை,முருங்கை, அகத்தி, முளைக்கீரை, தவசி முரு ங்கை, சண்டி, கறிவேப்பிலை, பசளி, தூதுவளை, பருப்புவகைகள், சோயா பீன்ஸ், பேரீச்சம்பழம், இதர உலர்ந்த பழங்கள் முதலியன.

தினமும் 50g கீரையைச் சேர்த் துக் கொண்டால் நமது தினசரி இரும்புத்தேவை பூர்த்தியாகும். அத்துடன் விற்றமின் C,B கரோட்டின் கல்சியம்

இரும்புச்சத்துக் குறைந்தால், இரும்புச்சத்துக் குறைவுதான் உடலிலேயே பரவலாகக் காணப்படும் தாதுப்பொருள் குறைபாடு. இரும்புச்சத்துக் குறைந்தால் இரத்தச்சோகை ஏற்படும். பெண்களுக்கு இரத்த இழப்பு பல காலக் கட்டங்களில் ஏற்படும். கட்டிளமைப்பருவ நிலையிலுள்ள இளம் பெண்களுக்கு மாதாந்த உதிரப் போக்கு ஏற்படும்போது இரும்புச்சத்துக் குறைபாடு ஏற்படும். கர்ப் பிணிகளுக்கும் குறைபாடு ஏற்படும். ஏனெனில் கருவிலுள்ள சிசுவுக்கு அதிகளவில் இரும்புச் சத்துத் தேவை.

ஆண்களுக்குச் சில நோய்களாலும் மூலம் போன்ற இரத்த இழப்பு நோய்களாலும் இரத்தச் சோகை ஏற்படலாம். மொத்தத்தில் இருபாலாருக்கும் உணவுக் குறைபாடுகள், இரத்த இழப்பு என்பவற்றால் இரும்புச்சத்துக் குறைபாடு ஏற்படும். இரத்தச் சோகை வேறு சில காரணங்களால் ஏற்பட்டாலும் இரும்புச்சத்துக் குறைபாட்டால் ஏற்படும் சோகைதான் மிக அதிகமாகக் காணப்படுகின்றது.

(முற்றும்)

D.R .ந.ஸ்ரீசரவணபவானந்தன்,
குழந்தை வைத்தியநிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு தாயகத்தில் எந்த உரிமையுமில்லை

## மீண்டும் உறுதிப்படுத்தியுள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலய சம்பவம்

(லண்டன்)

வவுனியா நெடுங்கேணிப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகாசிவராத்திரியை கொண்டாடுவதற்கு அனைத்து ஒழுங்குகளும் செய்யப்பட்ட நிலையில் அனைத்து பொருட்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் ஆலயப் பூசகர் இழுத்துச் செல்லப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் நேற்று நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளதுடன், அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர்களுக்கு தாயகத்தில் வழிபாட்டு, சமய உரிமை உட்பட அனைத்து உரிமைகளும் தடை செய்யப்பட்டுள்ளமை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. சிவராத்திரிக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

சமய பாரம்பரியங்கள் ஒரு இனத்தின் அடையாளத்தின் கூறுகளில் ஒன்றாகும். மகாசிவராத்திரியை தடுப்பது, தொடரும் கட்டமைப்பு படுகொலையினதும் கலாசார படுகொலையினதும் ஒரு அங்கமே ஆகும்.

தொடரும் மனித உரிமை மீறலை ஐ.நா மனித உரிமை ஆணையாளரும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா மனித உரிமை பேரவையும் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோருகின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# உத்தியோகபூர்வ கையிருப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி கடந்த ஜனவரி மாத இறுதிக்குள் நாட்டின் மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு 4,500 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இந்த உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்களில் சீனாவின் மக்கள் வங்கியின் 1.4 பில்லியன் டொலர் அந்நியச் செலாவணி வசதியும் அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(நி)


கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1991 - இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: -<br>உயரம்: 6<br>தகைமை/தொழில்: O/L, Business<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/14086 | பிறப்பு-1991 -இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: -<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14128 |
| பிறப்பு: 1993 -இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 83<br>உயரம் :5' 7"<br>தகைமை/தொழில்- Bsc (Agriculture). Forest Officer<br>எதிர்பார்ப்பு: படித்த. உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/14091 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: -44 1/4<br>உயரம் : 5' 4"<br>தகைமை/தொழில்: HND in Dentel therapy, School Dentel therapist<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி. மருத்துவத்துறை. Banker, Engineer<br>தொ.இ: G/14130 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: சூரி செவ் 5 இல்<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: BA, DO, விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு: படித்தவர். விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/14094 | பிறப்பு -1989 - இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: - 24 1/2 உயரம்:5' 2"<br>தகைமை/தொழில்: Bsc, Msc, PHD, இயன் மருத்துவ விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: ITபட்டதாரி. வெளிநாடு (கனடா)<br>தொ.இ: G/14134 |
| பிறப்பு: 1989- இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 33<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்:- MBBS (Doctor)<br>எதிர்பார்ப்பு: வைத்தியர். விரிவுரையாளர்<br>தொ.இ: B/14096 | பிறப்பு -1999 -இந்து<br>நட்சத்திரம் - மூலம்<br>கி.பா: -<br>உயரம்: 5' 8'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: படித்தவர். அரச. தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/14137 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# இன்று ஒரு தகவல் 58



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மனத்தளர்ச்சியும் நரம்புத்தளர்ச்சியும்

சார்! கதவை இழுத்துப் பூட்டியதற்குப் பிறகு பூட்டை திரும்பத் திரும்ப இழுத்துப் பார்க்கிற பழக்கம் உங்களுக்கு இருக்கிறதா? அப்படி என்றால் நான் சொல்லுகிறேன் என்று வருத்தப்படாதீர்கள். உங்களு க்கு நரம்புத்தளர்ச்சி இருந்தாலும் இருக்கலாம்.

நரம்புத்தளர்ச்சிக்கு இன்னமும் சில அறிகுறிகள் உண்டு. தொடர்ந்து பல இரவுகள் தூங்க முடியாமல் இருக்கும். கடந்து போன சீர்கேடுகளை நினைத்து தன்னையே வருந்திக்கொண்டு அது எல்லை மீறிப் போகும் போது தன்னம்பிக்கை இழந்து தற்கொலை செய்யலாம் என்று யோசிக்கிறது. அர்த்தமில்லாத பயம், எல்லை மீறிய பதற்றநிலை, தினசரி நடவடிக்கையிலே ஏற்படும் மாற்றம், ஏதோ ஒன்றைப் பற்றிய மாறாத சிந்தனை, செய்த ஒரு செயலையே திருப்பித்திருப்பி செய்கிறது பூட்டை இழுத்துப் பார்ப்பது மாதிரி.

இவையெல்லாம் நரம்புத் தளர்ச்சியின் அறிகுறிகள்! நரம்புத் தளர்ச்சி என்பது வேறு மனத் தளர்ச்சி என்பது வேறு. அது நரம்பியல் இது மனநோய். இரண்டிற்கும் சேர்த்து ஒரு பெயர் மன-நரம்பியல். நரம்புத் தளர்ச்சிக்கும் மனத்தளர்ச்சிக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

நரம்புத் தளர்ச்சி உள்ளவன் கற்பனையிலே கோட்டை கட்டுகிறவன். ஆனால் மனத்தளர்ச்சி உள்ளவன் கோட்டை கட்டுவதோடு இல்லாமல் அதிலேயே வாழ்ந்து கொண்டு இருப்பவன்.

பொதுவாக நரம்புத் தளர்ச்சி உள்ளவர்களுக்கு மகிழ்ச்சியோ மனநிறைவோ இருப்பதே இல்லை. ஆனால் அவர்கள் பிரச்சி னையை அவர்கள் முழுவதுமாக உணர்ந்து கொள்வதும் உண்டு. அதற்காக சிகிச்சை எடுத்துக் கொள்வதும் உண்டு. நரம்புத் தளர் ச்சியுள்ள ஒருத்தனுக்கு முக்கியமான பிரச்சினை என்னவென்றால். சராசரி மனிதர்களில் தானும் ஒருத்தராக வாழ்வதா அல்லது அவர்களிடமிருந்து வேறுபட்டு வாழ்வதா என்று.

ஆனால் மனநோய் உள்ளவன் ஆபத்தானவன். அவனுக்கு தன்னுடைய சூழ்நிலையைப் பற்றிய சிந்தனை அறவே இருப் பதில்லை. இவர்கள் தங்களை பெரிய ராஜாக்கள் என்று நினைத்துக் கொள்வது மட்டுமில்லாமல் எதிரிகளாலே தாக்கப்படுகிற பேராபத்திலே சூழ்ந்து இருப்பதாகவும் கற்பனை செய்து கொள்வார்கள்.

இருந்தாலும் நரம்புத் தளர்ச்சிக்கும் மனத்தளர்ச்சிக்கும் உள்ள வேறுபாடு ஒரு நூலிழை அளவுதான்! நரம்புத் தளர்ச்சிக்கு பல சிகிச்சை முறைகள் உண்டு. நரம்புத்தளர்ச்சியின் பிரிவு,அது உண்டான காரணம், தாக்கப்பட்டிருக்கின்ற அளவு, இதைப் பொறு த்து சிகிச்சை கொடுக்க வேண்டும்.

பொதுவாக மூன்று வகையான சிகிச்சைகளைத்தான் அதிகமாக எல்லோரும் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். கீமோதெரபி- மருந்து சிகிச்சை physiological methods- உடலில் நேரடியான சிகிச்சை பிசியோதெரபி.

மருந்துகள் மூலமாக கொடுக்கப்படும் சிகிச்சை தான் கீமோதெரபி! இது தான் மனநோய் மருத்துவத்திலே முதற்படி. இந்த மருந்து எல்லாம் என்ன செய்யும் தெரியுமா? நரம்புகளை அமைதிப்படு த்தும் அதோடு வீரியத்தை பொறுத்து வித்தியாசப்படும்.

சிலது மயக்க நிலையை ஏற்படுத்தும், சிலது தூக்கத்தை வரவழைக்கும், சிலது உணர்ச்சிகளைத் தூண்டும்,சிலது மனதிற்கு அமைதியைக் கொடுக்கும் இப்படிப் பல வகை.

ஒரு குறிப்பிட்ட நோயாளிக்கு குறிப்பிட்ட வகை மருந்து தான் பயன்கொடுக்கும். அதனால் மருத்துவ ஆலோசனை இந்த வகை சிகிச்சைக்கு மிகவும் அவசியம். இதைத்தவிர மின் அதிர்வு சிகிச்சை இருக்கிறது (ஈ.சி.ஜி). நரம்பு அறுவை சிகிச்சை இருக்கிறது.

மின் அதிர்வு சிகிச்சையிலே 200 மில்லி ஆம்ஸ், 100 மில்லி வோல்ட் உள்ள மின்சாரத்தை ஒரு விநாடிக்கு செலுத்துவார்கள். சில நேரங்களிலே இந்த மின்சாரத்தை மூளையோட ஒரு பகுதிக்கு மட்டுமே செலுத்துவார்கள். இந்த வகையிலே இந்தச்சிகிச்சை செய்யும் போது துணைவிளைவாக அமனீசியா பிரச்சினைகள் ஏற்பட்டாலும் கூட விரைவில் அது குணமாகிவிடும்.

நரம்பு அறுவை சிகிச்சையில் லோபோடமி என்னும் சத்திர சிகிச்சை செய்வார்கள். இதில் என்ன செய்வார்கள் என்றால் மூளை யையும் மூளையுடைய முன் பகுதியையும் இணைக்கும் நரம்பு நார்களையும் துண்டித்து விடுவார்கள்.

அது எல்லாம் நோய் முற்றிய நிலையிலே கடைசியாகத் தான் செய்வார்கள். அடுத்தது சைக்கோதெரபி. நரம்புத்தளர்ச்சிக்கு ஆணிவேர் குழப்பமும் பதற்றமும் தான். இது பெரும்பாலும் உள் மனதிலே புதைந்து இருக்கும். நேரடி மருந்து சிகிச்சையும் மின் அதிர்வு சிகிச்சையும் உடனடியாக நிவாரணம் கொடுத்தால் கூட நீண்ட கால நிவாரணம் சைக்கோ தெரபியிலே கிடைக்கும்.

இந்த முறை எப்படி என்றால் தேர்ச்சி பெற்ற மனநோய் நிபுணர்கள் நோயாளியின் மனதை ஊடுருவிப் பார்க்க முயற்சி செய்கிறார்கள். நோயாளிகள் நினைப்பதை கூச்சமில்லாமல் சொல்லுவதற்கு தூண் டுவார்கள். அதனாலே நோய்க்கான மூல காரணம் தெரியும் அதற்கு பரிகாரம் தேடுவது சுலபம். யாராக இருந்தாலும் சரி தன்னோட குறையை நினைத்து வெட்கமோ, துக்கமோ பட வேண்டியதில்லை. ஆரம்பத்தில் கவனித்து விட்டால் அதிகமாக ஒன்றும் பயப்படத்தேவை இல்லை

ஒரு அரசன் இருந்தார். அவர் தனது இடத்தில் மனநோயா ளிகளுக்கு மருத்துவ மனை கட்டிக் கொடுத்தார். ஒரு நாள் அரசன் தன்னுடைய பரிவாரங்களுடன் அந்த மருத்துவமனையை பார்வை இடுவதற்கு சென்றார். அங்கே இருந்த ஒருத்தர் அரசனை பார்த்து நீ யார் எனக் கேட்டார்.அரசனுக்கு மிகவும் அவமானமாகிப் போய்விட்டது.

என்னப்பா என்னையே பார்த்து நீ யார் என்று கேட்கிறாய். உனக்கு எவ்வளவு துணிச்சல். நான் யார் தெரியுமா? நான் தான் இந்த நாட்டின் அரசன் என்று பெருமையுடன் சொன்னான். அதற்கு அந்த மனிதன் நான் கூட இங்கே வந்த புதிதில் இப்படித் தான் சொல்லிக் கொண்டு இருந்தேன். பரவாயில்லை போகப்போக சரியாகி விடும் என்றாராம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நடவடிக்கைகளை தீவிரப்படுத்திய வடகொரியா

## அதிகரிக்கும் பதற்றம்!

(பியாங்யாங்)

**வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் அந்நாட்டு இராணுவத்தின் போர் நடவடிக்கைகளை தீவிரப் படுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**



அமெரிக்காவும் தென் கொரியாவும் ஆயிரக் கணக்கான துருப்புகளுடன் கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள நிலையிலேயே அவர் இந்த நடவடிக் கையை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

அதன்படி வடகொரியா வின் மேற்கில் உள்ள ஒரு பாரிய இராணுவ நடவடிக்கை தளத்தில் துருப்புக் களை ஆய்வு செய்த கிம், போர் நடவடிக்கைளை தீவிர ப்படுத்துமாறு உத்தரவிட்டு ள்ளார்.

இந்நிலையில் வடகொரி யாவின் அரச செய்தி நிறு வனம், இராணுவம் தற் போதுள்ள சூழ்நிலையின் தேவைகளுக்கு ஏற்ப போர் தயாரிப்புகளை தீவிரப்ப டுத்தும் ஒரு புதிய உச்ச கட்டத்தை மாறும் வகையில் கொண்டு வர வேண்டும்.

நம் இராணுவம் சரி யான போர் தயார்நிலைக் கான அதன் யுத்த திறன் களை விரைவாக மேம் படுத்துவதை நோக்கமாகக் கொண்ட உண்மையான போர் பயிற்சிகளை சீராக தீவிரப்படுத்த வேண்டும் என கிம் உத்தரவிட்டு ள்ளதாக தெரிவித்துள் ளது.

எவ்வாறாயினும் வட கொரியா இராணுவத்தை நவீனமயமாக்கும் விதமாக தொடர்ந்தும் ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (நி)

## சிவராத்திரி ஊர்வலத்தில் மின்சாரம் தாக்கி 17 குழந்தைகள் காயம்

(டில்லி)

இந்தியாவின் ராஜஸ் தான் மாநிலத்தில் சிவரா த்திரி விழா ஊர்வலத்தின் போது மின்சாரம் தாக்கி ஒரு பெண் மற்றும் 17 குழந் தைகள் காயமடைந்துள்ள னர்.

அவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக இந்திய ஊடக ங்கள் செய்தி வெளியிட்டு ள்ளன.

குழந்தைகள் குழு ஒரு உலோகக் கம்பத்தில் இணைக்கப்பட்ட கொடியை ஏந்திக்கொண்டிருந்த போது உயர் அழுத்த மின்சார கம்பியைத் தொட்டதில் மின்சாரம் பாய்ந்ததில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

தீக்காயங்களுக்கு உள் ளான சிறுவர்கள் 9 முதல் 16 வயதுக்கு இடைப்பட்டவர் கள் என இந்திய ஊடக ங்கள் மேலும் தெரிவித்து ள்ளன. (நி)

## 32 ஆவது அங்கத்துவ நாடாக நேட்டோவில் இணைந்தது சுவீடன்



(சுவீடன்)

நேட்டோ அமைப்பில் சுவீடன் கடந்த வியாழக் கிழமை உத்தியோகபூர்வ மாக இணைந்து கொண் டது. நேட்டோவின் 32 ஆவது அங்கத்துவ நாடு சுவீடன் ஆகும்.

நீண்டகாலம் அணிசேரா நாடாக விளங்கிய சுவீடன் உக்ரைன் மீதான ரஷ்யா வின் படையெடுப்பின் பின் னர் நேட்டோவில் இணை வதற்கு விண்ணப்பித்தது.

எனினும் நேட்டோவில் சுவீடன் இணைவதற்கான சம்மதத்தை தெரிவிப்பதற்கு துருக்கியும் ஹங்கேரியும் தயங்கிவந்தன.

பின்னர் இவ்விரு நாடுக ளும் தமது சம்மதத்தை தெரி வித்த நிலையில் நேட்டோ வில் சுவீடன் இணைந்து கொண்டது.

நேட்டோவில் சுவீடன் இணைந்ததை வரவேற்று ள்ள சுவீடன் பிரதமர் ஊல்வ் கிறிஸ்டேர்சன் இது சுதந் திரத்துக்கான ஒரு வெற்றி என தெரிவித்துள்ளார். (நி)

## நாசா விண்வெளி வீரர் திட்டத்தில் பட்டம் பெற்ற முதல் அரபு பெண்

(வோஷிங்டன்)

ஐக்கிய அரபு இராச்சி யத்தை சேர்ந்த 30 வய தான எமிராட்டி விண்வெளி வீராங்கனையான நோரா அல்மத்ரூஷி நாசாவின் பயிற்சி திட்டத்தில் பட்டம் பெற்ற முதல் அரபு பெண் மணி என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இயந்திர பொறியியலா ளரான அல்மத்ரூஷி 2001 ஆம் ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியம் ஸ்பேஸ் ஏஜெ ன்ஸி ஊடாக நாசாவின் பயிற்சித் திட்டத்தில் இணைய தேர்வு செய்யப்பட்ட இரு வீரர்களில் ஒருவரா வார்.

எமிராட்டி விண்வெளி வீராங்கனையான நோரா அல்மத்ரூஷி தனக்கு முன் இருந்த தன் மூதாதையர் களைப் போலவே தனது வாழ்நாளின் பெரும் பகுதியை நட்சத்திரங்களைப் பார்ப்பதிலும் சந்திரனுக்குப் புறப்பதைப் பற்றிக் கனவு



காணபதிலும் கழித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## உலகின் சிறந்த கோப்பி;

### தென்னிந்திய 'பில்டர் கோப்பிக்கு' 2 ஆவது இடம்

(டில்லி)

டேஸ்ட் அட்லஸ் என்ற உலகின் பிரபல உணவு மற்றும் பயண நிறுவனம் சமீபத்தில் உலகளாவிய "கோப்பி" தரம் மதிப்பீடு குறித்து ஆய்வு நடத்தியது.

புகழ்பெற்ற உலகின் சிறந்த 38 கோப்பிகள் பட்டி யலில்கியூபன்எஸ்பிரசோ முதலிடம் பெற்றது.

இந்தியாவின்புகழ்பெற்ற தென்னிந்திய பில்டர் கோப்பி 2 ஆவது இடத்தை பிடித்தது.

"கியூபன் எஸ்பிரசோ" என்பது கியூபாவில் தோன் றிய ஒருவகை எஸ் பிரசோ ஆகும். இது வறுத்த கோப்பிக் கொட்டை, பழுப்பு சர்க்கரை பய ன்படுத்தி இயந்திரத்தில் தயாரிக்கப்பட்ட கோப்பி தென்னிந்தியாவில் பிர பலமாக உள்ள பில்டர் கோப்பி ஒரு பாரம்பரிய கோப்பி என்பது குறிப்பி டத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையானது எதுவென தேர்ந்தெடுக்கத் தெரிந்து விட்டால் தேவையற்றதும், பரபரப்பும் தானாகவே விலகி விடும். – ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சைவ சமயத்தைப் பாதுகாக்க தமிழ் அரசியல் முன்வரமாட்டா

வவுனியா வெடுக்குநாறிமலையில் சிவ ராத்திரி விரத காலத்தில் வழிபாடு செய்தவர்கள் மீது பொலிஸார் நடத்திய அடாவடித்தனம் சைவ மக்களின் மனங்களை நோக டித்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் முன்பும் பல தடவைகள் இடம்பெற்றுள்ளன.

எனினும் நம்மவர்களின் எதிர்வினை போதுமானதாக இல்லை.

பொதுவில் சைவ சமயத்துக்கு அநீதி இழைக்கப்பட்ட போதெல்லாம் தமிழ் அரசியல் வாதிகள் மௌனமாகவே இருந்துள்ளனர்.

கத்தோலிக்க மக்கள் மத்தியில் தங்களை மதசார்பற்றவர்களாகக் காட்டிக் கொள்ளும் பொருட்டு அத்தகையதொரு கீழ்நிலைச் செயற்பாட்டை அவர்கள் செய்தனர்.

தவிர, தமிழ் அரசியல் தரப்புகள் சைவ சமயம் சார்ந்து ஏதேனும் கருத்துரைப்பதாக இருந்தால், அது அவர்களின் நலன்சார்ந்தாகவேயன்றி வேறில்லை.

சுருங்கக்கூறின் ஈழத்தில் சைவ சமயத்தைப் பாதுகாப்பதற்குத் தமிழ் அரசியல் வாதிகள் ஒருபோதும் முன்வரமாட்டார்கள் என்பது நிறுதிட்டமான உண்மை.

அதேநேரம் சைவ சமயத்தைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபட மாட்டார்கள்.

உண்மையில் வெடுக்குநாறி ஆதிசிவனாலயத்தில் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பதற்கு முன்னதாக, நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறுகின்ற நடைமுறையைப் பின்பற்றியிருக்க வேண்டும்.

பொதுவில் சமகாலத்தில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நீதிமன்றங்கள் பாதுகாத்து வருகின்றன.

ஆம், முல்லைத்தீவு நீதிமன்றம் குருந்தூர் மலை தொடர்பில் வழங்கிய தீர்ப்பு தமிழ் மக்களுக்கு நம்பிக்கையைத் தந்தது.

அந்தத் தீர்ப்பை வழங்கிய நீதிபதிக்கு தென்பகுதி அரசியல் மட்டத்தில் அழுத்தம் இருந்தபோதிலும் அவர் தான் வழங்கிய தீர்ப்பில் உறுதியாக இருந்ததுடன் தனது பதவியையும் விடுத்து வெளிநாடொன்றில் தஞ்சம் புகுந்தார்.

இதுபோல நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு பொலிஸார் தடை கோரி நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்தபோது, நினைவேந்துவது அடிப்படை மனித உரிமை என்ற தீர்ப்பை நீதிமன்றங்கள் வழங்கியுள்ளன.

எனவே நீதிமன்றங்களின் உதவியுடன் வெடுக்குநாறிமலை ஆதிசிவனாலயத்தில் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டித்திருந்தால், மனதை நோகடிக்கின்ற நிகழ்வுகள் ஏற்படாதவாறு தடுத்திருக்க முடியும்.

அத்தோடு சிவராத்திரி விரதத்துக்கும் பங்கம் இல்லாமல் வழிபாட்டை மேற்கொண்டிருக்க முடியும்.

எனவே சைவ சமயத்தைப் பாதுகாப்பது என்ற நினைப்பில் தமிழ் அரசியல் தரப்புக்களை உள்வாங்குவோமாயின், அதனால் சைவ சமயம் நிர்க்கதியாகும் கவனம்.

# தமிழ் மக்கள் மீதான வன்மம் அடங்கவில்லை

## வெடுக்குநாறி தாக்குதல் சம்பவம் தொடர்பில் சீமான்

(சென்னை)

சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்ட தமிழர்கள் மீது, இலங்கை அரசு தாக்குதல் நடத்தி கைது செய்துள்ளமை இனவெறியின் உச்சம் என நாம் தமிழர்கட்சியின்தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

ஈழத்தாயகத்தில் வவுனியாமாவட்டத்தில்அமைந்துள்ள வெடுக்குநாறிமலையில் சிவன் இரவை முன்னிட்டு நீதிமன்றத்தில் அனுமதிபெற்று வழிபடச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட தமிழர்களைத் தடுத்து, அவர்கள் மீது இலங்கை இனவாத அரசின் பொலிஸார் கொடுந்தாக்குதல் நடத்தியுள்ளமை வன்மையான கண்டனத்துக்குரியது எனவும் சீமான் தெரிவித்துள்ளார்.

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் வெடுக்குநாறி மலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வழிபாடு நிகழ்வுகளை நிறுத்துமாறு பொலிஸார் தெரிவித்திருந்த நிலையில் அதனை மீறிதரித்து நின்றவர்களை தாக்கி கைது செய்திருந்தனர்.

இதனை பலரும் கண்டித்திருந்த நிலையில் நாம் தமிழர் கட்சியின் தலைமைஒருங்கிணைப்பாளர் சீமானும் இதனை கண்டித்து தமது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும் குறித்த பதிவில் "ஈழ நிலத்தில் 2 இலட்சம் அப்பாவி தமிழர்களைத் துள்ளத்துடிக்கப் படுகொலை செய்து முடித்த பிறகும், தமிழர்கள் மீதான வன்மமும், இனத்துவேசமும் துளியும் அடங்காது இன அழிப்பு நடவடிக்கையைத் தொடர்ச்சியாக அரங்கேற்றி வருகின்றது.

அதன் நீட்சியாக, தமிழர் அடையாளச் சிதைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமிழர் பண்பாட்டு விழுமியங்களையும் தொன்மச் சான்றுகளையும் மெல்ல மெல்ல அழிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது சிங்கள இனவாத அரசு.

அருகாமையிலிருக்கும் ஒரு நாட்டில் இத்தகைய இனவெறிக்கொடுமைகளும், பண்பாட்டு அழிப்பு நடவடிக்கைகளும்தொடர்ச்சியாக நடைபெற்று வரும் போதும் இந்தியாவை ஆளக்கூடிய பாஜக அரசு அதுகுறித்து எவ்வித எதிர்வினையும் ஆற்றாது அமைதிகாப்பது ஒட்டு மொத்த தமிழர்களுக்கும் இழைக்கும் பச்சைத் துரோகமாகும் என்று தெரிவித்துள்ளார். (ம-7,10)

# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பதணம்)

யாழ். வண். வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு எதிர் வரும் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு அபிஷேகம்,மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜை நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதி வலம்வருவார்என பிரதம குருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் அறியத்தருகிறார்.

(ம-7,10)

# பரமபிதா காட்டிய பாதை

## இருளைவிட ஒளியை விரும்புவோம்

தவக்காலத்தின் நான்காவது ஞாயிறான இன்றைய பைபிள்பகுதி யோவான் நற்செய்தியின் 3:14-21 இல் இருந்து எமக்கு தரப்படுகின்றது. இங்கு ஒரு புறத்திலே கடவுளின் அன்பும் மறு புறத்தில் தண்டனைப்பற்றியும் விளக்கப்படுகின்றது. இது முரண்பாடானதுபோல் தோன்றுகிறது. அன்பான கடவுளால் எப்படி, மற்றவர்களைத் தண்டிக்க முடியும்? இரக்கம் காட்டுகிற கடவுளிடமிருந்து, நாம் எப்படி கோபத்தை எதிர்பார்க்க முடியும்? கடவுளின் அன்பு உலகத்திலே எல்லோர்க்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. கடவுள் அனைவரையும் அன்பு செய்கிறார். ஆனால், அந்த அன்பை ஏற்றுக்கொள்வதும் உதறித் தள்ளுவதும் நம்மிடம்தான் இருக்கிறது. கடவுளுடைய தண்டனையைப் பெறுவதும் நம்மிடம்தான் உள்ளது. கடவுளிடத்தில் அன்பை எதிர்பார்த்தால், நாம் அன்புள்ள கடவுளைப் பார்க்கிறோம். அந்த அன்பை உதறித்தள்ளி விட்டு மனம்போன போக்கில் வாழ்ந்தால், கடவுளின் தண்டனையை எதிர்பார்க்கிறோம்.

தண்டனை என்பது இறைவன் நமக்குத் தருவதல்ல. மாறாக நாமே நமக்குத் தேடிக்கொள்வது என்னும் தெளிவை இந்த இறைவார்த்தைகள் விளக்குகின்றன. "ஒளி உலகிற்கு வந்திருந்தும் தம்செயல்கள் தீயனவாய் இருந்ததால் மனிதர் ஒளியைவிட இருளையே விரும் பினர். இதில்தான் அவர்களுக்கு எதிரான தண்டனைத் தீர்ப்பு அடங்கி யுள்ளது." தண்டனைத் தீர்ப்பு என்பது இறைவன் தருவதல்ல. தீய மனிதர்கள் இறைவனை விட்டு விலகி, தாங்களாகவே தேடிக் கொள்வது. "இறைவனின் தண்டனைத் தீர்ப்புபற்றி அஞ்சாமல், அவரது இரக்கத்தில் நம்பிக்கை கொண்டு" அருள்நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக என பைபிளில் எபிரேயர் புத்தகம் 4:16 பகுதி விளக்குகின்றது."

ஜோன் பவுல் அமெரிக்க இறையியல் பல்கலைக் கழகத்தில் ஒரு பேராசிரியராக இருந்தவர். அவரது மாணவர் ஒருவர் தொடர்ச்சியாக இறைவனைப் பற்றிய சந்தேகங்களைக் கேட்பவர். நீண்டகால கல்விக்குப் பின்னரும் அவர் இறைவனைத் தாம் முழுமையாக அறிந்து கொள்ளவில்லை என கூறினார். அவருக்கு அந்தப் பேராசிரியர், நீங்கள் இறைவனை அறியாவிட்டாலும் அவர் உங்களை அறிந்திருக்கிறார். உங்கள் ஒவ்வொரு செயலையும் அவர் அக்கறையுடன் கவனிக்கிறார். உங்களுக்குள் நீங்கள் ஆய்வு செய்து பார்த்தால் நீங்கள் விரைவிலேயே அவரை அறிந்து கொள்ளலாம் என்றார்.

கடவுள் நமக்குக் காட்டுகின்ற அன்பு வெறும் உணர்ச்சியோடு நின்றுவிடுவதில்லை. நம்மைத் தம்மோடு இணைத்து நமக்கு நிலைவாழ்வில் பங்களிப்பதற்காகவே கடவுள் தம் திருமகனை நமக்கு அளித்தார். இவ்வாறு நாம் நிலைவாழ்வில், நிறைவாழ்வில் பங்கு பெறும் பொருட்டு நமக்காகத் தம்மையே பலியாக்கிய இயேசுவை நாம் நம்பிக்கையோடு பற்றிக்கொள்ள வேண்டும். இந்நம்பிக்கை நம்மில் உறுதியாக வேரூன்றியிருக்க வேண்டும். கடவுளின் எல்லையற்ற வல்லமையால் அனைத்தும் கைகூடும் என்னும் உறுதியோடு நாம் கடவுளையும் அவரது மகன் இயேசுவையும் அணுகிச் சென்றால் அவர் நமக்குக் கொடையாகத் தருகின்ற நிலைவாழ்வு கிடைக்கும். இவ்வாறு கடவுளின் வல்லமை யான தூய ஆவியார் நம்மில் செயற்பட்டு நாம் நம்பிக்கை கொண்டோராக மாறும்போது அதிசய செயல்கள் நம்மில் நிகழும். அதன் விளைவாக, நாம் கடவுளின் அன்பை நம் இதயத்தில் உணர்வதோடு அந்த அன்பினை நம் சகோதரர் சகோதரிகளோடு மனமகிழ்வோடு பகிர்ந்திடுவோம்.

இங்கு இனிய சுவையுடன் கனிந்த கனி இருக்க கள்ளிக் காயைக் கடிக்கும் கடின மனத்தினர் சிலர் உள்ளர். ஊரெல்லாம் ஒளி வெள்ளமாக இருந்தாலும் சிலர் ஒதுங்கியே இருப்பர். ஊரெல்லாம் ஒன்று கூடி தேரிளுக்கும். ஆனால் அவர்கள் மட்டும் வேறெதையோ நோட்டமிட்டிருப்பார்கள். கலகலப்பாக கலக்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் இப்படி ஒரு சிலர் கல்லாகி மூலையில் முடங்கிக்கிடப்பர். இப்படி இயல்பானதை விட்டு விட்டு, முரணான முறையில் செயற்படும்போது அவர்களில் ஏதோ ஒரு குறை உள்ளது என்று பொருள். ஒளியில் வந்தால் தன் அழுக்கு, அசிங்கம், குறை, குற்றம் தனக்குத் தெரிய வரும். பிறர் தெரிய நேரிடும். தன்போக்கினை மாற்ற வேண்டும் என்ற தயக்கம். கோவிலுக்கு வந்தால் பாவவாழ்வு தனக்குத் தெரிய வரும். மனமாற்ற வாழ்வுக்கு தயாராக வேண்டுமே என்ற பயம். இருளில் இருப்பது இப்படிப்பட்டவர்களுக்கு வசதியானது. சுகமானது. ஒளிக்குள் வருவதற்கு உடலை வளைக்க வேண்டும். உள்ளத்தை ஒடுக்க வேண்டும். நம்மவர்களோடு கூடி கலகலப்பாக நல்லதைச் செய்ய பலவற்றை இழக்க வேண்டும். இவ்வளவு கஷ்ரப்பட்டு கிடைக்கும் இன்பத்தைவிட வலி இல்லாமல் கிடைக்கும் அற்ப இன்பம் போதும் என விட்டில் பூச்சிளாய், ஒளியை விட இருளையே விரும்பி வாழ்வை இழந்து விடுகின்றனர். ஒளியைத் தேடுவோம். கடவுளோடு இணைந்தே வாழ்வோம்.

ம.பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பக் கல்வியுடன் இடைவிலகும் மாணவர்கள்
# மாந்தை கிழக்கில் அதிகரிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இடை விலகுகின்ற தன்மை அதிகரித்து காணப்படுகின்றது. ஆரம்பக் கல்வியுடன் மாணவர்கள் இடை விலகுவது அதிகரித்துள்ளதாக குறித்த பாடசாலை அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

மாந்தை கிழக்கில் தற்போது 14 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. சிறாட்டிக்குளம், பாலைப்பாணி பாடசாலைகளுக்கு போக்குவரத்துகள் செய்யக் கூடிய சிறந்த பாதைகள் இல்லை. மழை காலத்தில் உந்துருளியில் கூட போக்குவரத்து செய்ய முடியாத நிலைமை காணப்படும்.

மேற்படி இரு பாடசாலைகளிலும் இருந்து நட்டாங்கண்டல், பாண்டியன்குளம் ஆகிய பாடசாலைகளுக்கு இடை நிலை கல்விக்கு மாணவர்கள் வருவதற்கு 13 கிலோ மீற்றர் தூரம் மாணவர்கள் பயணிக்க வேண்டி உள்ளதால் ஆரம்ப கல்வியுடனேயே இப்பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இடை விலகுகின்ற நிலைமை உருவாகி உள்ளது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மாந்தை கிழக்கில் உள்ள பாடசாலை மாணவர்களை இலக்காக கொண்டு பேருந்து பணிகளை நடத்துங்கள் என பிரதேச, மாவட்ட மட்டங்களில் கோரிக்கைகள் விடுத்து பேருந்து சேவைகள் நடத்துவோம் என தீர்மானங்கள் எடுத்த போதிலும் பேருந்து சேவைகள் நடத்தப்படாததன் காரணமாக மாணவர்கள் இடை விலகுகின்ற நிலைமை காணப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாந்தை கிழக்கு பாடசாலைகளின் மாணவர்களின் போக்குவரத்துக்கு பேருந்து சேவைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலமே மாந்தை கிழக்கின் பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இடை விலகுகின்ற நிலைமையை தவிர்க்க முடியும் என அவர்கள் சுட்டிக்காட்டினர். (நி-350)

# மட்டுவில் வடக்கில்
## வீடு உடைத்து நகை திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் வடக்கு கிராமத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பகல் வேளையில் வீடு உடைத்து வீட்டில் இருந்த 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் திருடப்பட்டிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் ஆட்கள் இல்லாத நேரம் வீட்டுக் கதவினை உடைத்து வீட்டினுள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டரைப் பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-30)

## கசிப்புடன் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சரசாலை வடக்குப் பகுதியில் நேற்று சனிக்கிழமை 4.5 லீற்றர் கசிப்புடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் துவிச்சக்கரவண்டியில் 3 போத்தல்களில் எடுத்துச் செல்லப்பட்ட 4.5 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது. இதன்போது கைதான சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-30)




யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் கடந்த புதன்கிழமை கணனிக் கூடம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வட மாகாண பிரதிக்கல்விப்பணிப்பாளர் ரி.தேவதாஸ், கலாநிதி.ஆறு திருமுருகன் விருந்தினர்களாக கலந்து கொண்டு கணனிக் கூடத்தை திறந்து வைத்தார்கள்.

(படங்கள்:- சிவசாந்தன்)

# முல்லைத்தீவு மாவட்ட
## மேலதிக அரச அதிபராக ஜெயகாந்த்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபராக (காணி) சி.ஜெயகாந்த் கடந்த வெள்ளிக்கிழமை கடமையினை பொறுப்பேற்றுக்கொண்டார்.

2006 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவை நியமனத்தில் இலங்கை நிர்வாக சேவை முதலாம் வகுப்பை பெற்று பிரதேச செயலாளராகவும் உதவி அரசாங்க அதிபராகவும் பணியாற்றியதோடு முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் 17 வருடங்களுக்கு மேலாக உதவி அரசாங்க அதிபாராகவும் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் பிரதேச செயலகத்திற்கு புதிய பிரதேச செயலாளர் ஒருவரை நியமிக்கும் வரை பதில் பிரதேச செயலாளராக பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6-299)



கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில் கரியாலை நாகபடுவான் பகுதியில் மிளகாய் அறுவடை விழா கடந்த புதன்கிழமை முழங்காவில் விவசாய போதனாசிரியர் ம.மகிலன் தலைமையில் இடம்பெற்றது.

(படம்:-தேவானந்தம்,கிருஷ்ணகுமார்)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 205 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 200 | 190 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 350 | 300 |
| தக்காளி | 350 | 300 | 300 | 375 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 130 | 120 |
| கோவா | 400 | 350 | 400 | 300 |
| கரட் | 350 | 500 | 450 | 350 |
| பூசணி | 220 | 220 | 200 | 160 |
| புடோல் | 150 | 150 | 150 | 120 |
| வாழைக்காய் | 200 | 200 | 180 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 230-300 |
| பெரிய வெங்காயம் | 400 | 400 | 450 | 600 |
| பாகற்காய் | 450 | 350 | 350 | 450 |
| வெண்டக்காய் | 250 | 200 | 250 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 80 |
| பயற்றங்காய் | 500 | 300 | 350 | 450 |
| லீக்ஸ் | 350 | 400 | 400 | 280 |
| பீற்றூட் | 300 | 350 | 350 | 250 |
| கறிமிளகாய் | 400 | 600 | 350 | 350 |
| முருங்கைக்காய் | 1000 | 1200 | 1100 | 1200 |
| போஞ்சி | 600 | 250 | 500 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 200 | -- |
| கீரை – 1 பிடி | 100 | 100 | 80 | 50 |
| தேசிக்காய் | 150 | 200 | 200 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 110 | 100 | 90 | 50-100 |
| இராசவள்ளி | 320 | 350 | 450 | -- |
| வெங்காயப்பூ | 160 | 200 | 200 | 100 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 70 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 120 | 100 |
| வல்லாரை | 60 | 50 | 80 | 40 |
| ஈரப்பலா | 100 | 150 | 80 | 70 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய பூசகர்...

உள்ளிட்ட 8 பேரைக் கைது செய்து தடுத்து வைத்திருந்தனர்.

குறித்த 8 பேரையும் வவுனியா நீதவான் நீதிமன்றில் நெடுங்கேணி பொலிஸார் நேற்று மாலை முன்னிலைப் படுத்தினர்.

இதன்போது ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் சார்பாக சட்டத்தரணிகளான க.சுகாஸ், தி.திருஅருள், அ.திலீப்குமார் உள்ளிட்ட குழுவினர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

இது தொடர்பில் சட்டத்தரணி தி.திருஅருள் கருத்துத் தெரிவிக்கையில்,

வெடுக்குநாறி ஆலயத்தில் கைது செய்யப்பட்ட 8 பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். குறித்த வழக்கு தொடர்பாக விசாரணைகள் இடம்பெறுவதால் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கடுமையாக தாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மன்றுக்கு தெரிவித்தமையால் சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்படுத்துவதற்காகவும் திகதியிடப்பட்டது எனத் தெரிவித்தார்.

குறித்த வழக்கு விசாரணை இடம் பெற்றபோது நீதிமன்றம் முன்பாக வேலன் சுவாமிகள், ஆலய நிர்வாகத்தினர் உள்ளிட்ட பலரும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10, 250)

## வலிகாமத்தில்...

மாவட்டச் செயலகத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-7,10,33)

## வரலாற்றுக்...

படிக்காத ஒரு அறிவிலி என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுதியுள்ள "சதி" என்ற நூல் தொடர்பில் தனது எக்ஸ் தளத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சிங்கள-பௌத்தர் பலமடைவது இந்நாட்டு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஒரு பிரச்சினை அல்ல. சிங்கள மொழி பேசுவதன் மூலமும், பௌத்த தரிசனத்தை கடைப்பிடிப்பதன் மூலமும் நானும்கூட சிங்கள பௌத்த சிந்தனையை பலப்படுத்தி வருகிறேனே! எமக்கு அதில் என்ன பிரச்சினை?

இந்நாட்டில் சிங்கள- பௌத்தம், பேரினவாதமாக மாறி, பல இனங்கள், பல மதங்கள், பல மொழிகள் என்ற இலங்கை பன்மைத்துவத்தை இல்லாது ஒழிப்பதே எமது பிரச்சினை. அதுதான் எமது நீண்டகால போராட்டம். உங்கள் "அரகலய" வுக்கும் இதற்கும் தொடர்பு கிடையாது.

நாடு முழுவதும் நடைபெற்ற அரகலயில் பங்குபெற்ற மக்களில் நூற்றுக்கு 99 வீதமானவர்கள் 2019, 2020 தேர்தல்களில் மொட்டு சின்னத்துக்கு வாக்கு அளித்தவர்கள். அவர்களே, கோட்டாபயவின் முட்டாள்தனமான, பொருளாதார கொள்கைகள் காரணமாக வயிற்றில் பாரிய அடி விழுந்தவுடன் தெருவுக்கு வந்து போராடியவர்கள்.

தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் கூட இவை பிரச்சினைகள்தான். ஆனால், அவற்றையும் மீறிய இன, மத ஒடுக்குமுறைகளால் அவர்கள் துன்பம் அடைந்தார்கள்.

ஆங்காங்கே ஒரு சில தமிழ், முஸ்லிம் மக்கள் இறுதி கால கட்டங்களில் அரகலயில் கலந்து கொண்டார்கள். சில அதிக பிரசங்கி தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் அதீத கற்பனையில் "இத்தோடு இந்நாட்டில் இனவாதத்தையும் ஒழித்து விடுவோம்" என முழங்கியதும் உண்மைதான். "நல்லது நடந்தால் சரி" என நாம் அவர்களை வாழ்த்தியதும் உண்மைதான்.

இன்று அரசியல் அரங்கில் அந்த அதிக பிரசங்கி தமிழ், முஸ்லிம் இளைஞர்களை காணவில்லை.

எது எப்படி இருந்தாலும், அரகலய முழுக்க முழுக்க, "வயிற்றில் பாரிய அடி விழுந்ததுடன், தெருவுக்கு வந்த சிங்கள பெருந்திரள் மக்களால்" நடத்தப்பட்ட ஒன்றாகும். அதுவும் 2019, 2020 தேர்தல்களில் மொட்டு சின்னத்துக்கு வாக்களித்த மக்களால் நடத்தப்பட்டது. இதுதான் உண்மை.

சிங்கள-பௌத்தர் பலமடைவது சிறுபான்மையினருக்கு பிடிக்காததாலேயே, அவர்கள் அரகலவை நடத்தினார்கள் எனக் கூறி, உண்மையை திரிபுபடுத்த வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடுமையாக கூறி வைக்க விரும்புகிறேன் என்று தெரிவித்துள்ளார். (ம-7,10)

## யுக்திய...

பொருள் தொடர்பான குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக 159 சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, ஹெரோயின், ஐஸ், கஞ்சா மற்றும் மாவா மாத்திரைகள் உட்பட கணிசமான அளவு சட்டவிரோத போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. (ம-7,10)

## வெளிநாட்டு...

கப்பட்ட வீதிகளுக்கு அருகாமையில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிதைந்த கைக்குண்டு ஒன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,10)

## வெடுக்குநாறி...

வொன்றில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து டக்ளஸ் மேலும் தெரிவிக்கையில்,

"இவ்வாறான செயற்பாடுகள் நாட்டில் இன நல்லிணக்கதை சீர்குலைக்கும் வகையில் அமைகின்றது.

சிவராத்திரி தினம் என்பது இந்துக்களின் முக்கிய சமயம் சார் நிகழ்வென் பதுடன் இதனை முன்னிட்டு குறித்த ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள அடியவர்கள் சென்றபோது பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக வெடுக்குநாறி மலை ஆதிசிவன் கோவிலில் நீதிமன்ற அனுமதியுடன் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சிவபக்தர்களையும் மற்றும் அவர்களின் வழிபாட்டையும் அவமானப்படுத்தும் வகையில் பொலிஸார் நடந்து கொண்ட விதம் அவர்களது அடாவடித்தனமாகவே இருக்கின்றது.

ஆலய தரிசனம் செய்வது அவரவர் உரிமை என்பதனால் இதைத் தடுப்பதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது என்றார். (ம-7,10)

## பொலிஸின்...

கைது செய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பூசை மற்றும் படையல் பொருட்கள் சப்பாத்துக் கால்களினால் சீருடை தரித்த நபர்களால் தட்டி அகற்றப்பட்டுள்ளது.

பூசகர் சிவத்திரு மதிமுகராசா மீளகைது செய்யப்படுள்ளார். இந்த ஈனச் செயல்கள் மிகப் பாரதூரமான சைவத் தமிழர்களின் மனதை காயப்படுத்தியுள்ளதுடன் அடிப்படை வழிபாட்டு ரிமையை மீறும் செயல் என்பதை உலகிற்கும் அரச உயர் பீடத்திற்கும் சொல்ல வேண்டியது ஒவ்வொரு தமிழர்களுக்கும் கடமையாகும்.

உலகம் பூராகவும் உள்ள சைவர்களின் மிக உன்னதமான முதன்மையான விரதம் சிவராத்திரி ஆகும்.

அந்த வகையில் இந்த சிவராத்திரி தினத்தில் வவுனியா மாவட்டத்தில் உள்ள தொன்று தொட்டு தமிழ்ச் சைவர்கள் வழிபட்டு வரும் ஆதிசிவன் கோவிலில் நடைபெற்ற மோசமான சம்பவங்களைக் கண்டித்தும் கைது செய்யப்பட்ட பக்தர்களை உடனடியாக விடுவிக்கக்கோரியும் நாம் அணிதிரண்டு எதிர்ப்பை பதிவு செய்வோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)


தன நிதானய
திகதி - 2024.03.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1444
M 07 11 46 54 M
64179

மஹஜன சம்பத
திகதி 2024/03/09
சீட்டிழுப்பு இலக்கம் 5414
Q 7 3 7 0 2 4
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 09/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1762
A 03 12 15 21 43
75997

லக்கி 7 VIP
திகதி 2024.03.09
சீட்டிழுப்பு இலக்கம் 0240
B 3 8 6 2 3 8 B

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3656
சீட்டிழுப்பு திகதி 09.03.2024
N 08 35 56 67
N 28849

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.09
சீட்டிழுப்பு இலக்கம் 0723
கன்னி 17 43 58 60 கன்னி
23586 01

உத்தியோகபூர்வ முடிவுகள்
09.03.2024 வெற்றி வாரம் 122 வர்ணம் நீலம்
H J 2 7 6 4 0 2
30,775,404.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2388 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 09.03.2024 தினம் சனிக்கிழமை
22 38 42 72 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,205,252.00
DLB

சனிதா
திகதி 2024.03.09 வெற்றி வாரம் 4549
03 22 31 33 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,412,137.60
DLB

சீட்டிழுப்பு வாரம் 4100 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.03.09 தினம் சனிக்கிழமை
06 29 46 51 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.10,440,458.80
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 40 24 27 42 63
1564 09.03.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 510,815,030.20
DLB DEVELOPMENT LOTTERIES தொலை பேசி: 011-2 333 546-47

சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2214
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2024.03.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.97,519,610.40
ADA KOTIPATHI
03 20 33 64 Y
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

**Village Hotel Jaffna Express**

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் → உரும்பிராய் → திருநெல்வேலி → யாழ்ப்பாணம் → கொழும்பு

**கட்டணம் - 2700/=**

(19118)

தொடர்புகளுக்கு

**077 544 8503**

## காணி விற்பனைக்கு

அல்லைப்பிட்டி 1 ஆம் வட்டாரத்தில் பிரதான வீதி முகப்பாக 33 பரப்பு பனங்கூடல் காணி விற்பனைக்கு உண்டு.

(19339)

**076 545 8446**

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8503)

## விற்பனைக்கு

Yamaha Mate 90 மற்றும் Honda CM 125 ஆகிய இரு மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு.

(023)

**077 882 8638**

## பணிப்பெண் தேவை

உடனடியாக பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

இடம் :
கச்சாய் சந்திக்கு அருகாமை

(C-8501)

**076 061 2378**

## மணமகள் தேவை

1984 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தர வருமானம், சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

Viber or Whatsapp
0044 7578 626565
077 251 9150

Email add: rajasasikumar@gmail.com

(19217)

## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/-





வயது: 21 முதல் 40 வரை

தொடர்புக்கு:-

**0777068777**

(C-8503)

## வீடு வாடகைக்கு தேவை

இருவர் கொண்ட குடும்பம் வசிப்பதற்கு யாழ் நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

(021)

**077 635 4224**

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் பலாலி வீதி செல்வா மஹால் திருமண மண்டபத்திற்கு அருகில் 7 1/2 பரப்பு காணி 15 அடி அகலப் பாதையுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

**077 229 4985**
**077 621 2039**

(19384)

## விற்பனைக்கு

1. திருநெல்வேலி ஆடியபாதம் வீதி சிவகாமி மஹால் மண்டபத்திற்கு அருகாமையிலுள்ள நாவலடி வீதியில் 3 3/4 பரப்புக்காணி முழுமையாகவும் அல்லது இரண்டு துண்டுகளாகவும் விற்பனைக்கு உண்டு.
2. பலாலி வீதி குகன் பெற்றோல் ஸ்ரேசன் அண்மையில் ஆனைவிழுந்தான் வீதியில் 2 1/2 பரப்புடன் கூடிய 6 அறைகளைக் கொண்ட புதிய வீடு விற்பனைக்குண்டு.

(016)

**077 625 2862, 071 176 1726**

## சமையல் உதவியாளர் தேவை

எமது உணவகத்திற்கு சமையல் உதவியாளர் தேவை.

(011)

**077 629 0894**

## வேலையாட்கள் தேவை

**Legend of Arch Firm Pvt Ltd**

நிறுவனத்திற்கு Building Supervisor
(With one Year Experience) Salary 30,000 - 35,000
(யாழ். நகரத்தில் வசிப்பவர்கள் மாத்திரம் விரும்பத்தக்கது.)
மேசன், கூலி ஆட்கள் தேவை.
திறமைக்கேற்ப சம்பளம் நாள் அல்லது Task அடிப்படையில் வழங்கப்படும்.

Director

(004)

**076 578 2957/ 076 570 7394**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

(19346)

**T.P : 077 780 3970, 074 007 1970**

## காணி விற்பனைக்கு

யாழ் பலாலி விமான நிலையத்தில் இருந்து 1 Km தூரத்தில் மயிலிட்டி K.K.S கரையோர காப்பட் பாதையிலிருந்து 3 ஆவது காணி விற்பனைக்கு உண்டு. 11 பரப்பு

விலை : பரப்பு 19 இலட்சம்

தொடர்புகளுக்கு :

(013)

**074 234 3241**

## RE/MAX ELITE CHUNNAKAM

## RE/MAX ELITE சுன்னாகத்தில் வீடு, காணி விற்பனைக்கு

- ❑ இராமநாதன் வீதி, குமாரசாமி றோட்டில் 1 1/2 பரப்பு காணிக்குள் நவீன வசதியுடன் கூடிய கீழ் வீட்டுடன் கூடிய 3 மாடி வீடு.
- ❑ வசாவிளான் 137 பரப்பில் சோலர் வசதியுடன் மற்றும் சோலர் மின் உற்பத்தி நிலையத்துடன் விவசாய பண்ணை விற்பனைக்கு.
- ❑ மானிப்பாய் வீதி முகப்புடன் ஐந்து சந்தியில் கடையுடன் கூடிய காணி விற்பனைக்கு.
- ❑ அராலி வீதி முகப்புடன் ஓட்டுமடத்தில் 14 பரப்பு காணி விற்பனைக்கு.
- ❑ பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலை அருகே 2 பரப்பு காணி விற்பனைக்கு.

(001)

தொடர்புகளுக்கு :

**077 744 1113, 021 224 2855**

**No.115, K.K.S Road, Chunnakam.**

## பணியாளர் தேவை

சூப்பர் மாக்கட் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர் தேவை.

- காஷியாள் - ஆண்
- இரவு நேரங்களில் பணிபுரிய கூடியவர்கள் தேவை

நேரில் வந்து தொடர்பு கொள்ளலாம்.

**Happy Super Market**
உரும்பிராய்

(0025)

**077 121 5548**

## வீடு வாடகைக்கு

யாழ். நகரின் மையப் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

(018)

**072 267 6713**

## வீடு வளவும் நெற் காணியும் விற்பனைக்கு

சுழிபுரம் மத்தி பறாளை வீதியில் அமைந்துள்ள 6 1/2 விஸ்தீரணம் உள்ள வளவும் அதனுள் அமைந்த 3 அறைகள், கோல், சமையலறையும் தனிக் கிணறும் உடைய வீடும்
பறாளை வயல் வெளியில் அமைந்த 6 பரப்பு நெற்பரப்பு காணியும் விற்பனைக்குள்ளது.

**077 744 8080, 077 227 1327, 077 617 6451**

(024)

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 264 /= | |
| 1 Kg அரிசி மா | - 196 /= | |
| 1 Kg Prima கோதுமை | - 188 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 295 /= | |
| 1 Kg சம்பா | - 230 /= | |
| 1 Kg தீட்டல்பச்சை | - 165 /= | |
| 10 Kg விஜிதா நாடு | - 1940 /= | |
| 180 ml Chik சம்போ | - 395 /= | ~~480/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3600 /= | ~~3900/=~~ |
| 180g Protinex | - 1799 /= | ~~2000/=~~ |
| 300 g நெஸ்டமோல்ட் | - 580 /= | ~~620/=~~ |
| 1Kg சன்லைட் பவுடர் றோஸ் | - 345 /= | ~~450/=~~ |
| 01 Lux சோப் றோஸ் | - 145 /= | ~~175/=~~ |
| 750 ml New VSP நல்லெண்ணை | - 1450 /= | ~~1550/=~~ |

1055/=




~~1110/=~~

(0025)

**யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்**

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org